# தமிழ் நாடு

திங்களிதழ்

இதழ் - 39

தமிழ்நாட்டு மக்களின் உரிமைக் குரல்

நன்கொடை உரு.20


## ஆளுநர் அமைப்பு முறையே தேவையில்லை!

# இந்தியாவெங்கும் உள்ள எல்லா மாநிலங்களின் ஆளுநர் பதவிகளையும் ஒழிப்போம்!

**இந்தியா எங்கும் உள்ள மாநிலங்களின் முற்போக்கு அமைப்புகள், சனநாயக இயக்கங்கள், ஆதரவுக் கட்சிகளை எல்லாம் அணி சேர்த்துத் தில்லியில் மிக விரைவில் போராட்டத்தை ஒருங்கிணைக்க இருக்கிறது தமிழக மக்கள் முன்னணி!**

## ஆளுநர் அமைப்பு முறையை ஒழிக்காமல் மாநிலங்களின் அடிப்படை உரிமைகளைக்கூட பெற முடியாது!

## ஆளுநர்களை ஆளுநர் மாளிகைகளில் இருந்து வெளியேற்றியாக வேண்டும்!

**இந்திய அரசியல் சட்டத்தால் நீக்க முடியாத ஓர் அரசு அதிகாரியாக ஆளுநரே இருக்கிறார்!**

**முதல் குடிமகன் என்று சொல்லப்படுகிற குடியரசுத் தலைவரைவிட அதிக அளவு அதிகாரத்தை ஆளுநருக்குக் கொடுத்து வைத்திருக்கிறது இந்திய அதிகார வெறி அரசு!**

**இந்திய அரசு அமைப்பு முறையையே தலைகீழாக மாற்றாமல் மக்களின் எத்தகைய உரிமைகளையும் நாம் மீட்டெடுக்க முடியாது!**

**தமிழ்நாடு எங்கும் தமிழக மக்களிடம் இந்தக் கருத்துகளைக் கொண்டு செல்வோம் வாருங்கள்!**

**ஆளுநர் பதவி ஒழிப்புத் தொடர் முழக்கங்கள் ஓங்கி ஒலிக்கப்பெற வேண்டும்!**



இரண்டு இலக்கத்திற்கு மேல்..!

ஆளுநர்கள் செலவுக்கெல்லாம்
மக்களின் பணமே பறிபோகுது!

மக்கள் விரட்டும் முன்
ஆளுநர்களே மாநிலங்களை
விட்டு ஓடிவிடுங்கள்!

வள்ளுவரை, வள்ளலாரை
இழிவுபடுத்துகிற
ஆர் எஸ் எஸ் இரவியே
வெளியேறு வெளியேறு!!

ஆகிய முழக்கங்கள் விண்ணதிர முழங்கப்பட்டன.

தமிழக மக்கள் முன்னணி ஒருங்கிணைப்பில் 60 க்கும் மேற்பட்ட அமைப்புகள் கூடி, சென்னை சைதாப்பேட்டையில் 2025, திசம்பர் 13 ஆம் நாளன்று ஆளுநர் பதவி என்பதே தேவையில்லை. அது ஒழிக்கப்பட வேண்டும் என ஒருமித்து முழங்கின.

தமிழக மக்கள் முன்னணியின் உறுப்பியக்கங்களின் தலைமைத் தோழர்கள் பொழிலன், பேராசிரியர் செயராமன், கண.குறிஞ்சி, நிலவழகன், பாவெல், நாகேசுவரன், தங்க. குமரவேல், சுப்பு. மகேசு, சௌ.சுந்தரமூர்த்தி, குணசேகரன், எட்வின் தோழர்களும்,

தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் தி. வேல்முருகன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் வன்னியரசு, இந்தியப் பொதுவுடைமைக் கட்சி சிவா, தமிழ்த்தேசிய விடுதலை இயக்கம் தியாகு, மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி வாலாசா வல்லவன், ஐக்கிய விவசாயிகள் முன்னணி கே. பாலகிருட்டிணன், தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி மா.லெ. மீ. த. பாண்டியன், மக்கள் அதிகாரம் கழகம் தோழர் வெற்றிவேல் செழியன், திராவிடர் விடுதலைக் கழகம் தபசி குமரன், தந்தை பெரியார் திராவிடர் கழகம் ஆவடி நாகராசன், இந்திய சமூக சனநாயகக் கட்சி அஸ்கர், தமிழ்நாடு முற்போக்குப் பெண் வழக்கறிஞர்கள் சங்கம் வழக்கறிஞர் பானுமதி, தமிழ் மீனவர் விடுதலை வேங்கைகள் மங்கையர்ச்செல்வன், புரட்சிகர இளைஞர் முன்னணி தமிழ்வாணன், தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் பிசுமில்லாகான், தமிழ்த் தேச மக்கள் முன்னணி செந்தில், சாதி ஒழிப்பு முன்னணி இரமணி, தற்சார்பு விவசாயிகள் சங்கம் கி. வே. பொன்னையன், பச்சைத்தமிழகம் அருள், தமிழ்த் தேசக் குடியரசு இயக்கம் க இரா தமிழரசன், ஐந்திணை மக்கள் கட்சி தேவதாசு, தமிழர் முற்போக்கு கழகம் ஐங்கரன், தமிழ் வழிக் கல்வி இயக்கம் சின்னப்பத் தமிழர், தாய்த் தமிழர் இயக்கம் க. பா. சீனிவாசன், கம்யூனிஸ்ட் கட்சி மா. லெ. மக்கள் விடுதலை இராசாமணி, தமிழ்ச் சிறுத்தைகள் கட்சி அகத்தியன், தொழிலாளர் சீரமைப்பு குழு சேகர் உள்ளிட்ட இயக்கங்களின் தலைவர்களும், தோழர்களும்,

சிறப்பு அழைப்பாளர்களாக நடிகர் மன்சூர் அலிகான், அற்புதம் அம்மா, முனைவர் மா பூங்குன்றன், சாக்குலின் செஞ்சி இராமச்சந்திரன், பேராசிரியர் கல்யாணி, முனைவர் கி. குணத்தொகை, ஆலப்பாக்கம் முருகேசன் ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர். (சிலர் உரையாற்ற நேரமில்லாமல் போனது..) பன்னூற்றுக் கணக்கினர் பங்கேற்று எழுச்சியோடு நடந்த ஆர்ப்பாட்டத்தில்,

வேண்டாம் வேண்டாம்
ஆளுநர் அமைப்பு முறையே
வேண்டாம் !

கூடாது கூடாது
ஆளுநர் பதவியே கூடாது!

கொட்டி அழுகிறது தமிழ்நாடு!
கொழுத்துத் திரிகிறார்கள் ஆளுநர்கள்!

வந்தேறி ஆளுநர்களே..
வந்த வழியே திரும்பிப் போங்கள்!

ஆளுநர்க்கு ஒருநாள் செலவு

போராட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :

1. 1852 ஆம் ஆண்டு தங்கள் ஆட்சி நலனுக்காக ஆங்கிலேயர்கள் உருவாக்கியதுதான் ஆளுநர் என்கிற பதவி, 1947 ஆங்கிலேயர்கள் வெளியேற்றப்பட்டு, இந்தியா விடுதலை அடைந்ததாக அறிவிக்கப்பட்ட பின்னரும் ஆளுநர் அமைப்பு ஒழிக்கப்படவில்லை.

இந்திய அரசியல் அரங்கிலேயே குடியரசுத் தலைவர் தொடங்கி ஊராட்சித் தலைவர் வரை அனைவரும் தேர்தல் முறையால் தேர்ந்தெடுக்கப்படும் நிலையில், ஆளுநர் மட்டுமே தேர்தல் வழியில் அல்லாமல் தலைமை அமைச்சரின் ஆதரவில் குறுக்கு வழியில் அமர்த்தப்படுகிறார்.

குடியரசுத் தலைவரே கூடத் தலைக்குற்றச்சாட்டுக்கு (இம்பீச்மென்ட்) உள்ளாக்கப்பட்டுப் பதவி நீக்கம் செய்யப்படுகிற அதிகாரம் இருக்கும் போது, ஆளுநர்கள் மட்டுமே அவ்வாறு எந்த வகையிலும் நீக்கம் செய்யப்பட முடியாதவராக உள்ளார்.

மேலும், அவருக்கு மட்டுமே இருப்பதைப் போல் நினைப்பதைச் செய்கிற விருப்ப அதிகாரம் (டிஸ்டகிரிமினேசன் பவர்) வேறு யாருக்கும் இல்லாத நிலை உள்ளது. எனவே, ஆளுநர் அமைப்புமுறை ஒன்றுதான் முழுக்க முழுக்க சனநாயகமற்ற பதவியாக, மாநில உரிமைகளை முழுக்க அழிக்கிற பதவியாக இருக்கிறது.

எனவே, அதை முழுமையாக ஒழிக்க வேண்டும் என மிக வலிமையாக அனைவரும் ஒருங்கிணைந்து தீர்மானித்து அறிவிக்கிறோம்.

இந்தத் தீர்மானத்தைத் தமிழ்நாட்டில் மட்டுமின்றி இந்தியா முழுமையும் சனநாயகத்தில் நம்பிக்கை உள்ள அனைவரையும் வலியுறுத்தி முழங்கிப் போராட வலியுறுத்துகிறோம்.

2. தமிழ்நாடு அரசிலிருந்தும் பிற மாநிலங்களில் இருந்தும் ஆளுநர்களுக்கு எனச் செய்யப்படும் வரைமுறையற்ற செலவுகள் அனைத்துச் செயற்பாடுகளையும் தமிழ்நாடு அரசும் பிற மாநில அரசுகளும் உடனடியாக நிறுத்த வேண்டும். அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற இடங்கள், வசதி வாய்ப்புகள் அனைத்தையும் திரும்பப் பெற வேண்டும் என்றும் நாங்கள் அனைவரும் ஒன்றாகத் தீர்மானித்து அறிவிக்கிறோம்..

3. அண்மையில் எஸ் ஐ ஆர் என்கிற பெயரில் இந்திய அரசு செய்து கொண்டிருக்கிற மோசடிகளை மக்கள் நன்றாகவே உணர்ந்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் எஸ் ஐ ஆர் வழி எடுக்கப்படும் கணக்கீடுகளில் பிற மாநிலங்களைச் சார்ந்தவர்கள் எத்தனைப் பேர் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை வெளிப்படையாகத் தேர்தல் ஆணையம் அறிவிக்க வேண்டும் என்றும், இந்தியத் தேர்தல் ஆணையம் மாநிலங்களின் தேர்தல்களை நடத்தக்கூடாது என்றும், மாநிலங்களில் அந்தந்த மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் தேர்தல் ஆணையங்கள் அமைத்து, அவற்றின் வழியாக மட்டுமே மாநிலத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்றும் இப் போராட்ட அமைப்புகள்

தீர்மானமாக அறிவிக்கின்றன.

# இன அழிவைத் தூண்டும் இறைவழிபாடு

தமிழிசைப்பா

**வழிபாடு**

வழிபாடு என்னும் சொல் வழி- படு என்று பிரிந்து 'வழிபடுத்துதல்' என்னும் பொருள்படும். வழிபடு என்பதிலிருந்து 'வழிபாடு' என்னும் சொல் தோன்றியது. வழிபடு என்பதற்கு வணங்குதல், பின்பற்றுதல், நெறிப்படுத்துதல், வழிச்செல்லுதல், பூசனை முறைகள் மேற்கொள்ளுதல் என்று தமிழகராதிகள் பலபொருள் தருகின்றன. தெய்வங்களை மகிழ்விப்பதற்காக மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் அனைத்தும் வழிபாடு என்றும், இறைவனுடன் இரண்டறக் கலப்பதே வழிபாடு என்றும், உள்ளக் கதவினை இறைவனுக்காகத் திறப்பதே வழிபாடு என்றும் வழிபாடு குறித்துப் பல்வேறு விளக்கங்கள் முன்வைக்கைப்பட்டாலும் நம் முன்னோர் இட்டுச் சென்ற வழியில் செல்லுதலே வழிபாடாகும் என்று ஆய்வாளர் முனைவர்.க.காந்தி அவர்கள் உரைக்கிறார்.

**இயற்கை வழிபாடு**

இயற்கையின் கூறுகளான நிலம், நீர், நெருப்பு, காற்று, வான், மலை, ஞாயிறு, திங்கள் போன்ற இயற்கைப் பொருள்களை வழிபடும் தன்மையையே இயற்கை வழிபாடு என்றழைப்பர். இயற்கையின் சூழல்களுக்கு ஏற்ப மனிதர்களும் தமது வழிபாட்டினை வகுத்துக் கொண்டார்கள். மேலும் அச்சத்தின் விளைவாகவே வழிபாடுகள் தோன்றலாயின என்பர். பேரிடியையும், பெருமழையையும், பொங்கும் கடலையும், பெருகும் ஆற்றையும், சூறைக்காற்றையும் கண்டு அஞ்சிய மனிதர்கள் இயற்கையை வழிபடத் தொடங்கினார்கள்.

**தொல்காப்பியர் கூறும் வழிபாடு**

தமிழரின் தொன்மை இலக்கணமாகத் திகழ்வது தொல்காப்பியமாகும். நில அமைப்பைக் கொண்டு, பழந்தமிழரின் இயற்கையோடு இயைந்த தெய்வ வழிபாட்டு நெறியைத் தொல்காப்பியப் பொருளதிகாரம் பின்வருமாறு வரையறுக்கிறது.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே" (தொல். பொருள் ; 5)

என்கிறது. மேலும்,புறத்திணைகளில் ஒன்றான பாடாண் திணையில் மக்கள் இயற்கையினை வணங்கியதை,

"கொடிநிலை கந்தழி வள்ளி என்று
வடுநீங்கு சிறப்பின் முதலான் மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே" (தொல்.புறம்) எனத் தொல்காப்பியம் சுட்டுகிறது.

**இலக்கியங்களில் இயற்கை வழிபாடு**

நிலம், நீர், தீ, காற்று, வான் போன்றவை இயற்கையின் அமைப்புகளாகக் கொள்ளப்படுகின்றன. மண் செறிந்த நிலம். மேலோங்கிய வான், அவ்வானம் தழுவும் காற்று, அக்காற்றால் எழும் நெருப்பு, அந்நெருப்புக்கு முரணாக நீர் என ஒன்றுடன் ஒன்று தழுவி இவ்வுலகில் அமைந்துள்ள இயற்கையின் கூறுகளை மனிதர்கள் தம் சூழ்நிலைக்கேற்ப வழிபடும் முறைமையைச் சங்கப் புறநானூறு பாடல்,

மண்திணிந்த நிலனும்
நிலன்ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளத் தலைஇய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பூதத்து இயற்கை....(புறம் 2:1- 6 ) என இவ்வழிப்பாட்டினை ஐம்பூத வழிபாடு என்கிறது.

**உருவ வழிபாடு**

ஞாயிறு வழிபாட்டைப் பழந்தமிழர் மக்கள் பெரிதும் போற்றி வந்துள்ளனர். பொங்கல் திருநாளில் அறுவடை செய்து தானியங்களைக் கதிரவனுக்குப் படைத்து வழிபடும் மரபு தமிழர் வழிபாட்டிற்குரிய முதன்மைத் திருநாளாக கொள்ளப்பட்டது. பழந்தமிழ் மக்கள் ஞாயிற்றினைத் தொழுதமையினை,

"தயங்குதிரைப் பெருங்கடலுலகு தொழத்தோன்றி
வியங்குகதிர் விரிந்த வுருகெழு மண்டிலம்" (அகம் 263:1- 2)

என்று அகநானூறும்,

"முந்நீர் மீமிசைப் பலர்தொழத் தோன்றி
ஏமுற விளங்கிய சுடரினும்
வாய்மை சான்றநின் சொல்நயந் தோர்க்கே" (நற் 2 3:6- 8)

என்று நற்றிணையும், ஞாயிறு, திங்கள், தீச்சுடர் ஆகிய இயற்கையின் முக்கூறுகளை பழந்தமிழர் வழிபட்டதைத் தொல்காப்பியமும் கூறுகிறது. மேலும்,

"கதிர் மதி உடல்தொறும் கண்கள் ஆதலின்" (அறு.இல.பொருள் 11) என்று

ஞாயிறு, திங்கள் இரு சுடரையும் மனித உடலின் இரு கண்களாக கொண்டது அறுவகை இலக்கணம். மக்களினங்கள் இவற்றை ஆண் பெண் எனக் கற்பித்து வழிபடத் தொடங்கினர் என இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. ஞாயிற்றினையும்,திங்களையும் பயன் கருதித் தொழுதமையினை உலகப் பண்பாட்டு வரலாறு (History of world culture) எடுத்துரைக்கிறது. இயற்கையினை அச்சவுணர்வு நிலையில் அணுகி வழிபட்ட மனிதன் காலப்போக்கில் அதன் அருள் நிலையினை போற்றத் தொடங்கிக் கோட்டம் அமைத்து வழிபட்டமையினைச் சிலப்பதிகாரம் வழி அறியமுடிகிறது, திங்களுக்கு நிலாக்கோட்டமும், ஞாயிற்றுக்கு உச்சிகிழான்கோட்டமும் அமைக்கப்பட்டு வழிப்பட்ட நிலை இயற்கை வழிபாட்டில் இருந்து உருவுடைய இறைவழிபாட்டிற்கு வழியமைத்தமையினைப் புலப்படுத்துகிறது.

பழந்தமிழர் ஞாயிற்றினை ஆண் தெய்வமாகக் கருதி வழிபட்டுள்ளனர். இதனைச் சங்க இலக்கியத்தில் "பகல் கெழு செல்வன்" என நற்றிணையும், "பருதியஞ் செல்வன்" என அகநானூறும் குறிப்பிடுகிறது. இவ்வகையில் இயற்கை வழிபாட்டின் அடிப்படையில் தோன்றிய இறைவழிபாடு காலப்போக்கில் பலத் தெய்வ வழிபாட்டிற்கு வழியமைத்தது. வேத முறையிலான வேள்வி வழிபாட்டு நிலைகள் கொண்டு ஆரியத் தெய்வங்களும் வழிபாட்டு முறைகளும் தமிழர்களிடையே சிறப்புப் பெறுவதற்கு சமுதாயத்தில் உயர்ந்த நிலையிலிருந்த அந்தணரும், அரசருமே காரணமானார் என்பதை இலக்கியம் உறுதிபடுத்துகிறது. தமிழரின் தனித்த வழிபாட்டுமுறை காலப்போக்கில் பிறபண்பாட்டின் தாக்கத்தால் கலப்புப்பெற்ற நிலையினை இலக்கியச் சான்றுகள் தெரிவிக்கின்றன.

**இயற்கைக்கு மாறான வழிபாடு**

இயற்கையின் அச்சந்தரும் செயல்களே மனிதனைக் கடவுள் நெறிக்கு எடுத்துச் சென்றதென்பது மானிடவியலாரின் கருத்தாகும். மனிதனிடம் உள்ள ஆற்றலை ஓர் வரம்புக்குட்பட்டது எனக் கூறி கடவுள் நெறிக்கு மனிதனை ஆற்றுப்படுத்தி அவர்களிடம் அச்ச உணர்வை மேலோங்க செய்து அவன் அறிவுக்கும் ஆற்றலுக்கும் முறையே புலப்படாத, உட்படாதவற்றின் மீது நம்பிக்கை கொள்ள வைத்து இயற்கை வழிபாடை இறை வழிபாடாக மலர்ச்சியுறச்செய்து மதப் பூசலுக்கு மட்டுமே வழிவகை செய்கிறது பாசிசக் கூட்டம்.

வழிபடும் தெய்வம் துன்பக்காலங்களில் உதவும் என்ற நம்பிக்கை கொள்ள தொடங்கிய மாந்தர்கள் பல புதிரான செயலை உணர்விழந்து செய்கின்றனர். ஆண்களை விட பெண்களே அதிகமாக தெய்வ நம்பிக்கைகளில் அடிமைப்பட்டு வாழ்கின்றனர் என்றும் பெண்களின் உடலில் ஏற்படும் மாற்றங்களே அவர்களை மனமாற்றத்திற்கு உந்தப்பட்டு அச்ச உணர்வை அதிகப்படுத்தி இயற்கைக்கு மாறான இறைவழிப்பாட்டினை நோக்கிச் செயல்படுத்துகிறது என்றும் ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன. தீச் சட்டி ஏந்துதல், தீயில் இறங்குதல், பால்குடம் தூக்குதல், காவடி சுமத்தல், மண் சோறு சாப்பிடுதல்.... என இயற்கைக்கைக்கு ஒவ்வாத வழிபாடுகளை நோக்கிப் பயணிப்பது மக்களின் அறியாமையை வெளிபடுத்தி நிற்கிறது. தமிழ்ச் சமூக வழிபாட்டில் பொது வழிபாடாக நிலைபெற்று காணப்பட்ட இயற்கை வழிபாட்டை மறந்து சாதிய அடிப்படையில் கோவில்களையும், அவரவர் சாதியை உயர்த்திப்பிடிக்கும் வகையில் வழிபாடுகளையும், விழாக்களையும், கடவுள் மாநாடுகளையும் பல இடங்களில் நடத்தி புராண கட்டுக்கதைகளைக் கூறிப் பழைமையைப் பரப்பி சமூக அமைப்பைச் சீரழித்து இன அழிவைத் தூண்டுகிறது ஆர்.எஸ்.எஸ் சங்பரிவார் அமைப்பு. கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்துமுன்னணி திருப்பரங்குன்றத்தில் கலவரத் தீயைப் பற்ற வைக்கும் நோக்குடனே செயல்படுகிறது. ஆரியப் பார்ப்பனியத்தை அரங்கில் ஏற்ற முயல்கிறது.

தந்தை பெரியார் மொழிந்தது போல இந்து மதம் எனும் ஆரிய மதத்திற்குப் பல கடவுள்கள், பல மாதிரியான உருவக் கடவுள்கள் உண்டு. பிறவியிலேயே சாதி வகுக்கப்பட்டு பிராமணன்,சூத்திரன், பஞ்சமன், என்ற உயர்வு தாழ்வு கொண்ட சாதியினராகப் பிரிக்கப்பட்டுள்ளனர். இந்தக் கொள்கைக்கு நாம் ஆளாகி அவற்றுள் கீழ்சாதியாய் இருக்கிறோம். இதில் இருந்து மீள்வதற்குப் பல கடவுள் கொள்கை, மக்கள் பிறவி பேதக் கொள்கை ஆகியவற்றை ஒழித்து பகுத்தறிந்து அனைத்து மனிதர்களும் ஓர் ஆண் ஓர் பெண்ணிலிருந்து உருவாகி உலகமெங்கும் பல்கிப் பெருகியவர்களே. நாம் எங்கு வாழ்ந்தாலும் எம்மொழியைப் பேசினாலும் ஒரே குடும்பத்தின் அங்கங்களே. மனிதனுக்கு மனிதன் மரியாதையாக, அன்பாக, பக்தியாக, சாந்தியாக, சகோதரத்தன்மையாக, ஒற்றுமையாக, ஒழுக்கமாக, உதவியாக வாழும் கொள்கையே சமுதாயக் கொள்கையாகும் என்பதை அறிந்துக்கொள்ள வேண்டியது கடமையாகும். பெரியார் எனும் பெரு நெருப்பு கொண்டே இந்து என்கிற ஆரிய அடையாளத்தை உயர்த்திப் பிடித்து ஏனைய அடையாளங்களை அதற்கு கீழ்படுத்த எண்ணுகிற பார்ப்பனியத்திற்கு எதிராக சமூகப் பண்பாடுத் தளத்தில் சீர்திருத்தங்களைச் செயல்படுத்த இயலும் என்பதை அனைவரும் உணர்தல் வேண்டும். சனநாயக ஆற்றல் கொண்டே இன அழிவைத் தூண்டும் ஆர்.எஸ்.எஸ் சங்பரிவார் - பாசிச பாசக - இந்துத்துவ சதியை முறியடிக்க இயலும் என்பதைக் கருத்தில் நிறைப்போம்.

சாதியத் தீண்டாமை போது வராத கடவுள்!! பச்சிளம் குழநதையைக் கற்பழிக்கும் போது வராத கடவுள்!!கோவிலில் மட்டும் எப்படி வரும்!!

---

## தோழர் க. திருவள்ளுவன் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு

தமிழ்த்தேசியப் போராளி தோழர் க. திருவள்ளுவன் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும், தோழர் மொ. நடராசன் அவர்களின் படத்திறப்பும் 21- 12- 2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 11.00 மணி முதல் மாலை 6:00 மணி வரை சென்னை, மேற்கு மாம்பலத்தில் உள்ள சந்திரசேகர் அரங்கத்தில், புலவரின் பேத்தி ஊர்மிளா வள்ளுவன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. தமிழக வாழ்வுரிமைக் கட்சி நிறுவனத் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான தி. வேல்முருகன் அவர்கள் படத்தினைத் திறந்து வைத்து நினைவேந்தல் உரையாற்றினார். புலவர் மற்றும் திருவள்ளுவன் அவர்களுடன் களத்தில் நின்ற தோழர்கள் பி. இராதாகிருஷ்ணன், கோபால், காமராஜ் பேட்டையைச் சார்ந்த கோவிந்தன் ஆகியோர் நினைவேந்தல் உரை நிகழ்த்தினர்.

தோழர் தமிழ் ஒளி அவர்கள் இனிய தமிழ்ப் பாடல் தொடங்கினார், தோழர் செவ்வியன் புரட்சிகர கவிதை வாசித்து வானொலி வெங்கடேசன் நாடகம் நடித்த நிகழ்வைத் தொடங்கினர்.

மேலும், தமிழக மக்கள் முன்னணி ஒருங்கிணைப்பாளர் தோழர் பொழிலன் அவர்கள், தோழர் வாலாசா வல்லவன், புலவர் இரத்தினவேலன், இயக்குநர் புகழேந்தி தங்கராஜ் அவர்கள், பாட்டாளி மக்கள் கட்சி கொள்கை விளக்க அணித் தலைவர் தோழர் அ. வியனரசு , தோழர். தமிழ் முகிலன் , தமிழ்த்தேசியப் பேரியக்கத்தின் துணைத் தலைவர் தோழர் முருகன்குடி முருகன்
,தோழர் வேடியப்பன், தமிழ்த்தேசிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு



தோழர் செ. கர்ணன் , தமிழர் தேசியக் கூட்டமைப்பு நிறுவனர் தோழர் இராதாகிருட்டிணன், டங்ஸ்டன் திட்டம் எதிர்ப்பு மற்றும் இயற்கை வளப் பாதுகாப்பு இயக்கம் தோழர் கம்பூர் செல்வராசு, தமிழர் ஆட்சிக்கட்சி தோழர் லெ.க. சந்திரமோகன் , மூத்த ஊடகவியலாளர் டிஎசுஎசு மணி, ராஜ கம்பீரன், திரைப்பட நடிகர் தீனா, தோழர் தமிழா தமிழா பாண்டியன் , உலகத் தமிழின பேரியக்கம் நிறுவனத் தலைவர் தோழர் கரு. சந்திரசேகரன், ஆலப்பாக்கம் முருகேசன், வானொலி வெங்கடேசன், சிதானந்தம் வழக்கறிஞர் ஜான்சன், தமிழர் விடுதலைக் கட்சி காரைக்குடி தமிழ்க்கார்த்தி, வழக்கறிஞர் தோழர் சங்கரசுப்பு, தோழர் கவிதா உள்ளிட்டோர் நினைவேந்தல் நிகழ்வின் சிறப்புரை ஆற்றினார்கள்.

இந்நிகழ்வில் மூத்த போராளிகளுக்கு செந்தமிழ் நாள்காட்டியும், கைக்கடிகாரமும் மௌனம் கலைத்த முந்திரிக் காடுகள் புத்தகமும் நினைவுப் பரிசாக வழங்கப்பட்டன. இறுதியாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் தோழர் ஊர்மிளா வள்ளுவன் நன்றி உரையோடு நிகழ்வு நிறைவுற்றது

---

## தமிழ்நாட்டில் திரட்டும் மூலதனத்தில் இட ஒதுக்கீடு உரிமையுடன் தமிழர்களுக்கே வேலை வாய்ப்பு என்று ஒன்றிய அரசு / பொதுத் துறை நிறுவனங்களை வலியுறுத்திக் கண்டன ஆர்ப்பாட்டம்

சமூகநீதி இயக்கத்தின் சார்பில் தமிழ்நாட்டில் திரட்டும் மூலதனத்தில் இட ஒதுக்கீடு உரிமையுடன் தமிழர்களுக்கே வேலை வாய்ப்பு என்று ஒன்றிய அரசு / பொதுத் துறை நிறுவனங்களை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் 20/ 12/2025 காரி(சனி)க்கிழமை காலை 11 மணிக்கு நடைபெற்றது.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றிய தோழர் கார்குழலி துணைத்தலைவர், தென் மண்டல எல்.அய்.சி. பிற்படுத்தப்பட்டோர் ஊழியர் நலச்சங்கம் ஒன்றிய அரசு, பொதுத்துறை நிறுவனங்களில் ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் வேலைவாய்ப்பு எப்படித் தடை செய்துள்ளது என்பதை விளக்கினார். தமிழ் மக்கள் கூட்டியக்கம் சார்பில் வடசென்னையில் சனநாயக அமைப்புகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து செல்லும் தோழர் மா.சேகர் அவர்கள் அனைத்துத் துறைகளிலும் வேலை வாய்ப்பு என்பது கேள்விக்குள்ளாக்கபட்டுள்ளது என்பதை விளக்கினார். அடுத்ததாகத் தென்மண்டல எல்.அய்.சி எஸ்சி/ எஸ்டி ஊழியர் நலச்சங்கத்தின் சமூக உறவு செயலாளர் தோழர் சுரேஷ்குமார் பார்ப்பன பனியா சக்திகள் நாட்டைப் பின்னுக்கு இழுத்துச் செல்வதைக் கண்டித்தார். பெரியாரிய அம்பேத்கரிய மக்கள் இயக்க தோழர் செயகிருட்டிணன் கார்ப்பரேட்டுகளின் கொள்ளை இன்று தூய்மைப் பணியாளர் வரை நேரடியாகச் சூறையாடுவதை விளக்கிப் பேசினார். புரட்சிகர இளைஞர் முன்னணி பெரம்பூர் தோழர் மகிழ்நன் அவர்கள் தமிழக மக்களின் உழைப்பால் உருவாகும் மூலதன இலாபத்தில் பங்கும் இல்லை, அள்ளிச் செல்லும் வரிவருவாயிலிருந்து கிள்ளிக் கொடுக்கவும் மனமில்லை. ஒன்றிய அரசு பொதுத்துறை நிறுவனங்களில் தமிழ்நாட்டினருக்கு மாற்றாந்தாய் நிலைமையே நீடிக்கிறது என்று கண்டன உரை ஆற்றினார்.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சித் தோழர் வாலாசா வல்லவன் உரையாற்றுகையில் அரசியல் சட்டம் எழுதும் போதே தமிழர்களின் உரிமையைப் பறிக்கிறது என்பதை முன் வைத்த தந்தை பெரியார், தமிழ்நாடு ஏன் தனி நாடாக வேண்டும் என்று தன் வாழ்நாள் முழுவதும் போராடினார் என்பதை விளக்கிப் பேசினார். இறுதியில்




உரையாற்றிய தமிழக மக்கள் முன்னணி தோழர் பொழிலன் அவர்கள் நம்முடைய உரிமைகளை ஒன்றிய அரசு பறிப்பதைப் பற்றியும் மார்க்சியம் தான் தீர்வளிக்கும் என்று நாம் நம்பியதை சி.பி.அய், சி.பி.எம் கட்சிகள் ஏமாற்றியதையும், இன்று பார்ப்பனியத்தையும் இந்திய தேசியத்தை உயர்த்திப் பிடித்த பாரதியாரை விமர்சனம் செய்யும் போது பார்ப்பனர்கள் கூட விவாதத்திற்கு வராத போது சிபிஎம் கட்சி வரிந்து கட்டி பாரதியாரின் கருத்துகளுக்கு வெண் சாமரம் வீசுவது மோசமான செயல் என்பதையும் விளக்கிப் பேசினார்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் கண்டன உரை ஆற்றிய அனைத்துத் தோழர்களும் சமூக நீதி இயக்கத்தின் அடுத்தக் கட்ட போராட்டத்திற்குத் துணை நிற்போம் என்ற கருத்தை முன் வைத்தது நம்முடைய அடுத்தக் கட்டப் பணிகளை முன் எடுப்பதற்கு அடித்தளமாக அமைந்தது.

செய்தி : கு.கமலக்கண்ணன்

# இந்தியா :

பேராசிரியர் த.செயராமன்
தமிழ்மண் தன்னுரிமை இயக்கம்

# அடிமைப்பட்ட தேசிய இனங்கள் மாநிலங்களாய்! அடிமைப்படுத்தும் அதிகாரிகளாய் ஆளுநர்கள்!

இந்தியாவில் 28 மாநிலங்களும் 8 ஒன்றியப் பகுதிகளும் உள்ளன. இந்தியா 'மாநிலங்களின் ஒன்றியம்' என்று அழைக்கப்படுகிறது. அத்தனை மாநிலங்களும் தில்லியில் இருந்து இயங்கும் ஒன்றிய அரசின் அடிமைகளே. அனைத்து அதிகாரங்களையும் மையத்தில் குவித்து வைத்துக் கொண்டு, மாநிலங்களுக்குச் சொற்ப அதிகாரங்களை மட்டுமே அரசியல் சட்டம் வழங்குகிறது. ஒன்றிய அரசின் தயவு இல்லாமல் மாநிலங்கள் இயங்கவே முடியாது என்ற நிலை இந்தியாவில் நிலை பெற்றிருக்கிறது. இந்தியாவில் கூட்டாட்சி இருப்பதாகவும், அரசமைப்புச் சட்டம் அதைப் பாதுகாப்பதாகவும் தலைவர்கள் எல்லாம் பேசி வருகிறார்கள். ஆனால் எந்த மாநிலத்தின் நிலப்பரப்பும், மாநில உரிமையும், மாநிலத் தகுதியும் கூட, இந்தியாவில் பத்திரமாக இல்லை.

நேற்றைய காஷ்மீர் மாநிலம் இன்று யூனியன் பிரதேசங்கள் ஆகிவிட்டன. கூட்டாட்சிக் கோட்பாடு என்ன ஆனது? அரசமைப்புச் சட்டப் பாதுகாப்பு எங்கே போனது? மாநிலங்களின் எந்த உரிமையையும் எப்போது வேண்டுமானாலும் ஒன்றிய அரசு களவாடிக் கொள்ளலாம். இந்திய அரசு முறையில் கூட்டாட்சி சாயல்தான் உள்ளது; உண்மையில் கூட்டாட்சி நடைமுறையில் இல்லை. இது ஓர் 'அரைகுறைக் கூட்டாட்சி'. அதுவும் கூட ஒன்றிய அரசு அனுமதிக்கும் வரையில்தான்.

இந்திய அரசியல் சட்டம் எழுதும்போதே, தேசிய இனப் பகுதிகளை மாநிலங்களாகச் சுருக்கி, சொற்ப அதிகாரங்களைக் கொடுத்து, அதையும் எப்போது வேண்டுமானாலும் ஒன்றிய அரசு பறித்துக் கொள்வதற்குச் சட்டபூர்வ வழிமுறைகளையும் ஏற்படுத்தி, அனைத்திற்கும் மேலாக மாநிலங்களை நிரந்தரமாகக் கண்காணிப்பிலேயே வைத்திருக்கும் வகையில், அந்த மாநிலத்திற்கு எந்த வகையிலும் தொடர்பில்லாத, எந்த தேர்தலிலும் தேர்ந்தெடுக்கப்படாத, 35 வயது ஆன இந்தியக் குடிமகன் என்ற ஒற்றைத்தகுதியை மட்டுமே கருத்தில் கொண்டு, ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்டிருக்கும் ஆளுநர்கள் மாநிலங்கள் அடிமைப்பட்டவைதாம் என்பதற்கான அடையாளச் சின்னங்கள்.

ஆளுநர் என்ற இந்த அடையாளச் சின்னம் அகற்றப்பட வேண்டும். தேசிய இனங்களின் தன்மான, உரிமைஅரசியலின் முதல் முழக்கம் இதுவே ஆகும்.

அறிஞர் அண்ணா "ஆட்டுக்குத் தாடி, நாட்டுக்கு கவர்னர் " என்று கூறினார். ஆளுநர் பதவி தேவையற்ற ஒன்று என்பதை அண்ணா இவ்வாறு கூறினார். ஆனால் ஆட்டுக்குத் தாடி குடைச்சல் கொடுப்பதில்லை. ஆனால் ஆளுநர்கள் மாநிலங்களுக்குக் குடைச்சலைக் கொடுக்கிறார்கள். மாநில அரசுகளின் செயல்பாடுகளை முடக்குகிறார்கள். சட்டமன்றம் இயற்றும் சட்டங்களைக் கிடப்பில் போட்டு மாநில நிர்வாகத்தை நகர விடாமல் மயக்க நிலையில் வைக்கிறார்கள். மனிதனை முடக்கிப் போடும் முடக்கு வாத நோயைப் போல, மாநிலங்களுக்கு வாய்த்த நோய் ஆளுநர்கள்.

இந்தியா ஒரு சனநாயக நாடு என்கிறோம், இந்திய சனநாயகம் தில்லியில் இருந்து வரும் ஒரு கண்காணியால் மாநிலங்கள் கவனமாகக் கண்காணிக்கப்படுகின்றன. எந்த அசைவும் தில்லி எசமானவர்களுக்கு உடனடியாகச் சொல்லப்படுகிறது. தில்லி எசமானவர்களின் சார்பில் ஆளுநர்கள் மாநில அரசுகளை மிரட்டுகிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் மாநில அரசுகளை மக்களுக்கே தொடர்பற்ற, எவராலும் தேர்ந்தெடுக்கப்படாத ஆளுநர்கள் கலைத்திடும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டிற்கு ஆளுநராக வாய்த்திருக்கும் சனாதன ஆர்.என்.இரவி மட்டுமே கோளாறானவர் வேறு எவராவது வந்தால் நிலைமை சீரடைந்து விடும் என்று எவரும் கருத முடியாது. ஒவ்வொரு மாநிலமும் கடந்த காலத்திலும், இப்பொழுதும் ஆளுநர்களின் அடாவடித்தனத்தால் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்றன.



**ஆங்கிலேயர்கள் உருவாக்கிய ஆளுநர் பதவி**

ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவில் உருவாக்கிய பெருமாகணங்கள் (Presidencies) கவர்னர்கள் என்ற ஆளுநர்களால் நிர்வகிக்கப்பட்டன. 1773- இல் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியை ஒழுங்குபடுத்த இங்கிலாந்து நாடாளுமன்றம் இயற்றிய ஒழுங்குமுறைச் சட்டம் கல்கத்தாவில் இருந்த வங்காள கவர்னர் இனி கவர்னர் ஜெனரல் எனப் பொறுப்பு வகிப்பார் என்றும், சென்னைப் பெருமாகாண ஆளுநரும், பம்பாய் பெருமாகாண ஆளுநரும் அவருக்குக் கட்டுப்பட்டவர்கள் என்றும் கூறியது. 1833 - பட்டயச் சட்டம் வங்காள கவர்னர் ஜெனரலை 'இந்தியாவின் கவர்னர் ஜெனரல்' எனப் பெயர் மாற்றம் செய்து, பொறுப்பும் அளித்தது.

ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியின் இயக்குநர்கள் குழுவுக்கு (Board of Directors)அவர் பதில் சொல்லக் கடமைப்பட்டவர். 1857 இல் நிகழ்ந்த சிப்பாய் கலகத்திற்குப் பின், கம்பெனி நிர்வாகம் முடிவுக்கு வந்தது. இந்திய நிர்வாகத்தை இங்கிலாந்து விக்டோரியா மகாராணியார் நேரடியாக ஏற்றார். இந்திய கவர்னர் ஜெனரல் இங்கிலாந்து மணிமுடியின் பிரதிநிதி என்று பொருள்படும் வைஸ்ராய் (Viceroy) எனப் பொறுப்பு வழங்கப்பட்டார். வைஸ்ராயின் கீழ் ஆளுநர்கள் பெருமாகாணங்களை நிர்வகித்தனர். 1858 - இல் ஐந்து மாகாணங்கள் இங்கிலாந்து மணி முடியின் நேரடி ஆட்சியில் இருந்தன. இம்மாகாணங்களின் ஆளுநர்கள் இங்கிலாந்து மணிமுடியின் முகவர்கள் ஆவார்கள். இவர்களுக்கு முழுமையான மாகாண நிர்வாக அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. 1947 - இல் பிரிட்டானிய இந்தியாவில் 17 மாகாணங்கள் இருந்தன. இவை அனைத்தும் ஆளுநர்களால் நிர்வகிக்கப்பட்டன. அவர்கள் கவர்னர் ஜெனரல் அல்லது வைஸ்ராயின் நிர்வாகத்தின் கீழ் இருந்தனர். 1919 - மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டம் மாகாணத்தில் ஒரு சட்டமன்றத்தை உருவாக்கியது; நிர்வாகத்தில் இந்தியர்கள் பங்கேற்க வழி செய்தது. தேர்தலில் நின்று வெற்றி பெறும் கட்சியின் அமைச்சர்கள் அவர்களுக்கு என்று தரப்பட்ட அதிகாரங்களைப் (Transferred Subjects ) பயன்படுத்தி நிர்வாகம் செய்வார்கள். ஆனால், உண்மையான அதிகாரங்கள் ( Reserved subjects) ஆளுநர் மற்றும் அவருடைய கவுன்சிலிடம் இருக்கும். ஆளுநருக்கு மாகாண சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படும் மசோதாக்களை நிராகரிக்கும் வீட்டோ அதிகாரத்தைப் பெற்றிருந்தார்.

1935- இல் இந்திய அரசுச் சட்டம் மாகாண சுயாட்சி வழங்கியது. ஆனால், ஆளுநரின் விருப்பு உரிமை ( discretionary powers) அவருக்கு வழங்கப்பட்டன. அதைப் பயன்படுத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இயற்றும் மசோதாக்களை veto செய்யலாம். அம்மசோதாக்களுக்கு தன் ஒப்புதலை நிறுத்தி வைக்கலாம். இவையெல்லாம் மாகாண ஆளுநருக்கு ஆங்கிலேயர்கள் காலத்தில் வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள். அந்நியர்கள் ஆட்சிக் காலத்தில் அத்தகைய அதிகாரங்கள் ஆளுநர்களுக்குத் தேவைப்பட்டன. இந்தியா காலனிய ஆதிக்கத்தில் கட்டுண்டு கிடந்த காலம் அது.

1947 இல் இந்தியா விடுதலை அடைந்த பிறகு, இந்தியா தற்காலிக அரசியலமைப்பு ஆணை வெளியிடப்பட்டது. அதில் "ஆளுநரது விருப்பப்படி" என்ற சொல்லாடல் நீக்கப்பட்டது. இந்திய அரசியல் சட்ட அவை ( Constituent Assembly of India) இந்தியாவுக்கான அரசியல் சட்டத்தை உருவாக்கம் செய்தது. 1946 திசம்பர் 9 முதல் 1949 நவம்பர் 26 வரை, இரண்டு ஆண்டுகள் 11 மாதங்கள் 17 நாட்கள், இந்திய அரசியல் சட்ட அவை செயல்பட்டு இந்திய அரசியல் சட்டத்தை வரைவு செய்தது. அந்த அரசமைப்பு சட்டம் சுதந்திர இந்தியக் குடியரசுக்கானது.

ஆங்கிலேயர்கள் காலத்தில், மாகாணத்தில் சர்வ அதிகாரங்களையும் கொண்டிருந்த ஆளுநர்கள் என்ற பதவி, சுதந்திர இந்தியாவிற்குத் தேவையில்லை. ஆனால் இந்தியா - பாகிஸ்தான் என்று இரண்டு நாடுகளாகப் பிரிந்து விட்ட நிலையில், எந்த மாகாணமும் பிரிந்து போய் விடக்கூடாது என்று கட்டுப்பாட்டுக்குள் வைப்பதற்காகவே ஆளுநர் என்ற பதவியைத் தக்க வைத்தார்கள். இதன் விளைவாக, ஆங்கிலேயர்கள் காலத்தில் எப்படி மாகாணங்கள் கவர்னரின் கட்டுப்பாட்டில் இருந்தனவோ அது போல விடுதலை பெற்ற இந்தியாவிலும் கவர்னர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் சூழல் ஏற்பட்டது.

இந்திய அரசியலமைப்பை எழுதிய அவைக்கு மாகாணங்களுக்கான ஆளுநர்களை எப்படித் தெரிவு செய்வது என்பதைத் தீர்மானிப்பதே மிக முக்கிய பணியாக இருந்தது. Provincial Constitution Committee and the மற்றும் Constituent Assembly ஆகியவை ஆளுநரின் தேர்வு மற்றும் அதிகாரங்கள் குறித்து 1947 - 1948 ஆகிய ஆண்டுகளில் விரிவாக விவாதித்து முடிவு செய்தன.

இந்திய அரசியல் சட்ட வரைவுக் குழு (The Drafting Committee) ஆளுநர் குறித்த முடிவுகளைத் தங்களுடைய வரைவு அரசியலமைப்பில் சேர்த்துக் கொண்டது,

மாகாண அரசியலமைப்புக் குழு 1947 (Provincial Constitution Committee -1947) சர்தார் வல்லபாய் பட்டேல் தலைமையில், மாகாணத்திற்கான ஒரு அரசியலமைப்பைப் பரிந்துரை செய்ய பொறுப்பேற்றது. தொடக்கத்தில், வயது வந்த வாக்காளர்களால் (adult franchise) நேரடியாகத் தேர்தலில் ஓர் ஆளுநரைத் தேர்ந்தெடுப்பது என்ற முறையை இது பரிந்துரை செய்தது.

இதன் பிறகு, அரசியலமைப்பு ஆலோசகர் பி.என்.ராவ் தொடக்கநிலை வரைவு ஒன்றைத் தயார் செய்தார். அதில் மாகாண ஆளுநரை மாகாண சட்டமன்றத்தால் தேர்ந்தெடுப்பது என்ற என்ற முறையைச் சேர்த்து இருந்தார்.

1947- ஆம் ஆண்டு சூன் 7- அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஒரு 'சிறப்புத் தேர்தல் குழு' மூலம் ஆளுநரை அந்தந்த மாநில அரசு நியமிக்க வேண்டும் என முடிவானது.
இந்த அரசியல் சட்ட வரைவானது அரசியல் நிர்ணய சபைத் தலைவரிடம் வழங்கப்பட்டது. அப்போதும், இது சரியாக இருக்குமா என யோசனை எழுந்ததையடுத்து, ஆளுநர் தேர்வு குறித்து மீண்டும் விவாதம் நடந்தது.

1948- இல் அரசியல் அமைப்பு வரைவுக் குழு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள் தலைமையில் பி.என். ராவ் அளித்த முன்வரைவைப் பரிசீலித்தது. அதன் பிறகு வரைவு அரசியலமைப்பை (Draft Constitution) பிப்ரவரி 1948 இல் அளித்தது. இதில் ஆளுநரைத் தெரிவு செய்ய ஒரு மாற்று முறையைப் பரிந்துரைத்திருந்தது. மாகாண சட்டமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு நான்கு பெயர்களை அளிக்க வேண்டும் என்றும், அதில் ஒருவரைக் குடியரசுத் தலைவர் ஆளுநராக நியமிப்பார் என்றும் அதில் பேசப்பட்டது.
மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பொறுப்பேற்கும் முதலமைச்சர் இருக்கும் போது, ஆளுநரும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தால், அவர்களிடையே முரண்பாடுகள் வந்து விடும் என்பதால், சட்டமன்றம் நான்கு பேரைத் தெரிவு செய்யவும் என்றும், அதில் ஒருவரை குடியரசுத் தலைவர் ஆளுநராக நியமிப்பார் என்றும் கூறப்பட்டது.

"இதில் எந்த முறையில் வேண்டுமானாலும் ஆளுநரை நியமித்துக் கொள்ளுங்கள், ஆனால் மூன்றில் இரு பங்கு சட்ட மன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பதன் மூலம் ஆளுநரைப் பதவி நீக்கம் செய்ய முடியும்' என்று வரைவுச் சட்டம் கூறியது. இதனைப் பரிசீலிக்க சிறப்புக் குழு ஒன்றினை அரசியல் நிர்ணய சபைத் தலைவர் நியமித்தார். இந்தச் சிறப்புக் குழுவானது, ஆளுநரைக் குடியரசுத் தலைவர் நேரடியாக நியமிக்கலாம் என்று 1948- ஆம் ஆண்டு ஏப்ரல் 10- ஆம் நாளன்று கூறியது. மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் வாக்களிப்பதன் மூலம் ஆளுநரைப் பதவி நீக்கம் செய்யலாம் என்பது கைவிடப்பட்டது.

1949 இல் அரசியல் சட்ட அவையில் ஆளுநரைத் தெரிவு செய்வதற்கான வெவ்வேறு முறைகள் விவாதிக்கப்பட்டன. குறிப்பாக 1949 மே மாதத்தில். இதில் தேர்ந்தெடுக்கப்படும் ஆளுநர் முதலமைச்சருடன் உரசலில் ஈடுபடக்கூடும் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டது. மேலும் மாகாணத்தில் இணையான இன்னொரு 'அதிகார மையம்' உருவாகவும் வாய்ப்புள்ளது என்று பேசப்பட்டது.

இறுதியாக அரசியல் அமைப்பு நிர்ணைய அவையில் முக்கிய உறுப்பினர்களான ஜவஹர்லால் நேரு, டாக்டர் அம்பேத்கர் போன்றோர் மாகாண ஆளுநர் கட்சி சார்பற்றவராக இருக்க வேண்டும் என்றும், அவர் குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்பட வேண்டும் என்றும், இதன் மூலம் பாரபட்சமற்ற தன்மை, மற்றும் மைய அரசு - மாகாணங்கள் இவற்றிற்கிடையே ஓர் இணைப்பு ஆகியவை கிடைக்கும் என்றும் கூறினர்.

1949- ஆம் ஆண்டு மே 30- ஆம் நாள் அரசியல் நிர்ணய சபையில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்ட பிரதமர் நேரு பேசம்போது, "மாநில அரசு ஒப்புக்கொள்ளக் கூடிய பொதுவான ஒருவரை ஆளுநராக நியமிப்பது நல்லது. அரசியலில் நேரடியாகப் பங்கு கொள்ளாத, வெளி மாநிலத்தைச் சேர்ந்த, திறமைசாலியை ஆளுநராக நியமிப்பது மிகச் சிறந்தது. கல்வித்துறை அல்லது வேறு துறைகளைச் சேர்ந்த அறிஞர்கள் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டால், அவர்கள் அரசுடன் முழுமையாக ஒத்துழைத்து, அரசின் கொள்கைத் திட்டங்களைச் செயல்படுத்த எல்லா வகையிலும் உதவிபுரிவதுடன், கட்சிக்கு அப்பாற்பட்டவர்களாகவும் இருப்பார்கள்' என்று கூறினார்.

ஆளுநரை குடியரசுத் தலைவர் நியமிக்கும் முன்பு, மாநில முதலமைச்சரின் ஒப்புதலைப் பெறுவது தேவையானது என்ற நேருவின் கருத்தை டி.டி. கிருஷ்ணமாச்சாரி, அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் ஆகியோரும் வலியுறுத்திப் பேசினர்.

இது குறித்த திருத்தத்தை இறுதியாகக் கொண்டு வந்தவர் பிரஷேஸ்வர் பிரசாத். "மத்திய அரசின் அதிகாரம் அனைத்து மாகாணங்களிலும் நிலை நாட்டப்பட்டாக வேண்டும். இது அவசியமானது " என்பது அவர் கருத்து. இல்லாவிட்டால் மாநிலங்கள் பிரிந்து போய் விடக் கூடும் என்று அஞ்சினார்கள்.

நிறைவாக 1949 மே 31 அன்று "குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் ஆளுநர் " என்ற முடிவு எட்டப்பட்டது. இதுவே இந்திய அரசியல் சட்டம் கூறு - 155 இல் பேசப்பட்டிருக்கிறது.

இந்திய ஒருமைப்பாட்டைக் காக்க ஒன்றிய அரசின் நியமன ஆளுநர் என்ற முறை ஏற்கப்பட்டது. ஆளுநரின் ஒத்துழைப்புடன் இணக்கமான நிர்வாகம் மாநிலங்களில் நடைபெறும் என்ற அரசியல் சட்ட அவையின் எதிர்பார்ப்பு, நோக்கம், முயற்சி, அனைத்தும் இப்போது குழி தோண்டிப் புதைக்கப்பட்டு விட்டன. ஒன்றியத்தில் அதிகாரம் செலுத்தும் பாஜக திட்டமிட்டே மாநிலங்களின் நிர்வாகத்தை முடக்குவதற்காக, தங்கள் ஆட்களை ஆளுநர்களாக

நியமிக்கிறார்கள். தமிழ்நாட்டில் ஆர். என். இரவி செய்வதைப் பிற மாநிலங்களிலும் ஆளுநர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

**ஆளுநரால் தொல்லைப்படும் மாநிலங்கள்**

தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள் ஆளுநர்களால் உருவாக்கப்படும் தடைகளைக் கடந்து செயல்பட வேண்டியுள்ளது. காஷ்மீர் மணிப்பூர் போன்ற மாநிலங்களில் ஆளுநர்களே வன்முறைகளை உற்பத்தி செய்தார்கள். இந்திய அரசியல் சட்டம் வரைவு செய்த போது தலைவர்கள் எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக இன்று மையத்தில் உள்ள ஒன்றிய அரசின் விருப்பப்படி மாநில அரசைக் கண்காணிக்கும் கங்காணிகளாகவும், மாநில நிர்வாகத்தைத் தங்களுடைய விருப்ப அதிகாரங்களைப் பயன்படுத்தி முடக்கும் முட்டுக்கட்டைகளாகவும், ஆளுநர்கள் விளங்குகின்றனர்.

இத்தகைய ஆளுநர்களை என்ன செய்வது என்பது மாநிலங்களால் தீர்மானிக்க முடியாத மிகப்பெரிய பிரச்சனை. ஒரு மாநிலம் சட்டம் இயற்றி ஓர் ஆளுநரை நீக்க முடியாது. ஒரு மாநிலம் சட்டமன்றத்தின் மூலமோ, அமைச்சரவையின் மூலமோ ஆளுநர்களின் அதிகாரத்தைச் சுருக்கவும் வழியில்லை. ஆங்கிலேயர்கள் காலத்தில் மாகாண ஆளுநர்களுக்கு இருந்த விருப்பு அதிகாரத்தை, இந்தியா விடுதலை பெற்ற பிறகு மாகாணங்களின் நிர்வாகத் தலைவராகக் கருதப்படும் ஆளுநருக்கு இந்திய அரசியல் சட்டம் வழங்கி இருக்கிறது. ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் கவர்னர்களுக்குக் கூடுதல் பொறுப்பும் கடமையும் அதிகாரமும் இருந்தன. ஆனால் இப்போது கடமையும் பொறுப்பும் ஆளுநர்களுக்கு இல்லை; ஆனால் அதிகாரம் மட்டும் இருக்கிறது. இதைப் பயன்படுத்தி எவ்வளவு தொல்லைகளைக் கொடுக்க முடியுமோ அவ்வளவு தொல்லைகளை மாநில அரசுகளுக்குக் கொடுத்து வருகிறார்கள். மாநிலங்களில் இருக்கும் ஆளுநர் மாளிகைகள் சதியாலோசனை மண்டபங்களாக மாறியிருக்கின்றன. பிரமிக்க வைக்கும் அளவிற்கு மிகப் பெரும் தொகையை ஆளுநர்களுக்கும் ஆளுநர் வாழ்விடத்திற்கும் மாநில அரசு செலவு செய்ய வேண்டி இருக்கிறது. இதை மாநில அரசு குறைத்து விடவும் முடியாது. ஏனெனில் இந்திய அரசியல் சட்ட கூறு 158 - இன்படி ஆளுநருக்கான ஊதியம், சலுகைகள் நாடாளுமன்றத்தால் நிர்ணயிக்கப்படுகின்றன. அதை மாநில அரசு கொடுக்க வேண்டும். மாநில அரசின் செலவில் வாழ்ந்து கொண்டு, அந்த மாநில அரசுக்கு எந்தெந்த வகையிலெல்லாம் தொல்லை கொடுக்க முடியும் என்று ஆளுநர் சிந்தித்துக் கொண்டிருப்பார். மாநில அரசால் எதுவுமே செய்ய முடியாது. ஆளுநரை நீக்க வேண்டும் என்று வேண்டுகோளுக்கு மேல் வேண்டுகோள் குடியரசுத் தலைவரிடம் அளித்துவிட்டு காத்துக் கிடப்பதும், உச்ச நீதிமன்ற கதவை கட்டுவதுமாக மாநிலங்கள் இருக்கின்றன.

ஒன்றிய அரசில் காங்கிரஸ் கட்சி அதிகாரம் செலுத்திய போதும் ஆளுநர்கள் மூலம் மாநிலங்களுக்குத் தொல்லை கொடுக்கப்பட்டது. நரேந்திர மோடி பிரதமராக ஆனபின், அனைத்து மாநிலங்களிலும் பா.ஷ.க. அல்லாத பிற கட்சிகள் ஆட்சி செய்யும் அனைத்து மாநிலங்களிலும் ஆளுநர்கள் மூலம் ஓர் இணை- அரசாங்கத்தை நடத்துவதற்கு முயற்சி செய்யப்பட்டுள்ளது. பாஜக ஒன்றிய அரசு எல்லா மாநிலங்களிலும் ஆளுநர்களைப் பயன்படுத்தி மாநில நிர்வாகத்தை முடக்குகிறது.

**ஆளுநர்களின் அடாவடிகள்**

2015 ஆம் ஆண்டு அருணாச்சலப் பிரதேசத்தில் ஆளுநர் ஜே.பி. ராஜ்கோல்வா தானே சட்டமன்றத்தைக் கூட்டினார். காங்கிரஸ் கட்சிக்கு மெஜாரிட்டி இல்லை என்று அவரே அறிவித்தார். காங்கிரஸ் கட்சியின் எம்எல்ஏக்களை வெளியில் இழுத்து ஒரு பொம்மை அரசையும் அவரே உருவாக்கினார். உச்ச நீதிமன்றம் இதைக் கண்டனம் செய்தது; அந்தப் பொம்மை அரசை நீக்கியது.

உத்தரகாண்டில் காங்கிரஸ் ஆட்சியில் ஹரிஷ் ராவத் முதல்வர் . காங்கிரஸ் கட்சியில் 69 சட்டமன்ற உறுப்பினர்கள் அதிருப்தியாளர்களாக முதலமைச்சருக்கு எதிராக இருந்தனர். இதைப் பயன்படுத்தி ஆளுநர் கே.கே.பவுல் அந்த ஆட்சியை டிஸ்மிஸ் செய்தார். சட்டமன்றத்தில் தன்னுடைய பெரும்பான்மையைக் காட்டுவதற்கு ஹரிஷ் ராவத்துக்கு வாய்ப்பே தரப்படவில்லை. இதை உச்ச நீதிமன்றம் கண்டனம் செய்தது.

2017- இல் கோவா, மணிப்பூர், பீகார் ஆகிய மாநிலங்களில் ஆளுநர் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி பாஷக ஆட்சியை நிறுவினார். டெல்லியில் முதல்வர் வேட்பாளராக பாஜகவினால் களம் இறக்கப்பட்ட கிரண்பேடி படுதோல்வியைச் சந்தித்தார், அவர் உடனடியாகப் புதுச்சேரியில் ஆளுநராக நியமிக்கப்பட்டார். புதுச்சேரி முதல்வர் நாராயணசாமிக்குக் குடைச்சல் கொடுப்பதையே தம் ஆளுநர் பணியாகக் கிரண் பேடி செய்து வந்தார். அதிகாரிகளை நேரடியாக அழைத்துக் கலந்தாய்வு நடத்துவது, அதிகாரிகளுக்கு நேரடியாக உத்தரவிடுவது என்று போட்டி அரசாங்கத்தையே நடத்தினார்.

2017- ஆம் ஆண்டு, தமிழ்நாட்டின் ஆளுநராக இருந்த பன்வாரிலால் புரோகித் கோவையில் அதிகாரிகளுடன் நேரடியாக ஆலோசனை நடத்தினார். மாவட்ட ஆட்சியர், காவல் துறை அதிகாரிகள், மற்றும் நிர்வாக அதிகாரிகளை அழைத்து மாவட்ட நிர்வாகப் பணிகள் குறித்து ஆலோசனை நடத்தினார். கோவையில் நடைபெற்ற திட்டப்பணிகள் குறித்தும் ஆய்வு செய்தார். சில உத்தரவுகளையும் பிறப்பித்தார். இவ்வாறு தமிழக அரசின் நிர்வாகத்தில் ஆளுநர் நேரடியாகத் தலையீடு செய்தார். இதைத் தொடர்ந்து, வேறு சில மாவட்டங்களிலும் இதே வேலையைச் செய்தார். தமிழ்நாட்டின் நிர்வாகத்தில் குறுக்கீடு செய்ய வேண்டும் என்ற காரணத்திற்காகவே ஆளுநர்கள் இவ்வாறு தலையிட்டார்கள்.

சனநாயக ரீதியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளைக் கலைப்பது என்பது கடந்த காலத்தில் ஒன்றிய அரசின் ஒரு தொடர் நடவடிக்கையாகவே இருந்து வந்தது. 1970 கள் மற்றும் 1980 களில் இந்திரா காந்தி மாநில அரசுகளைக் கலைத்தார். அடுத்து வந்த மொரார்ஜி தேசாய் 1977 - இல் காங்கிரஸ் அரசுகளைக் கலைத்தார். மொரார்ஜி தேசாய்த் தலைமையிலான ஜனதா கட்சி அரசு, 1977- இல் இந்திரா காந்திக்குப் பிறகு பதவிக்கு வந்தபோது, காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்த ஒன்பது மாநிலங்களின் சட்டமன்றங்களைக் கலைத்து, புதிய தேர்தல்களை நடத்தியது. பீகார், ஹரியானா, இமாச்சலப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ஒடிசா, பஞ்சாப், ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்கள்.

தமிழ்நாட்டிலும் நான்கு முறை ஆட்சிக் கலைப்பு நடந்திருக்கிறது. திமுக அரசு இரண்டு முறையும் அதிமுக அரசு இரண்டு முறையும் கலைக்கப்பட்டு இருக்கின்றன.
1971 இல், தமிழ்நாட்டில் முதலமைச்சராக இருந்த கலைஞர் கருணாநிதி மீது பேரன்பு கொண்டவர் ஆளுநர் கே.கே .ஷா. ஆனால் அவரிடம் கட்டாயமாக ஆட்சி கலைப்புக்கான அறிக்கையைப் பெற்று இந்திரா காந்தி கலைஞர் கருணாநிதி அரசை 1976 - இல் கலைத்தார். 1991- இல் திமுக ஆட்சியில் இருந்தது. அகாலி தளத் தலைவர் சுர்ஜித் சிங் பர்னாலா நாட்டின் ஆளுநராக இருந்தார். காங்கிரஸ் கட்சி சந்திரசேகருக்கு ஆதரவு கொடுத்து அவரைப் பிரதமர் ஆக்கியது. தமிழ்நாட்டில் திமுக ஆட்சியைக் கலைக்கும்படி சந்திரசேகரை காங்கிரஸ் வற்புறுத்தியது. அப்போது குடியரசுத் தலைவராக இருந்த ஆர். வெங்கட்ராமன் திமுக ஆட்சியைக் கலைப்பதற்காக ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலாவிடம் அறிக்கை கேட்ட நிலையில், அறிக்கை தர மறுத்து, பர்னாலா தன் பதவியை துறந்தார்.

2021 - இல் புதுச்சேரி முதல்வர் நாராயணசாமியும், 2018 - இல் டெல்லி முதல்வர் கெஜ்ரிவாலும் ஆளுநர் மாளிகையின் வாயிலில் தர்ணா நடத்திய நிகழ்வுகள் நடந்தேறின.

**தமிழ்நாட்டில் ஆளுநர் ஆர்.என்.இரவி அத்துமீறல்கள்!**

தமிழ்நாட்டில் 2021- இல் ஆளுநராக ஆர்.என். இரவி நியமனம் செய்யப்பட்டார், அவர் தமிழ்நாட்டில் நேரடியாக நிர்வாகத்தில் ஈடுபட்டு ஒரு போட்டி அரசையே நடத்தத் தொடங்கினார். சட்டம் ஒழுங்கு உளவுத்துறை - டிஜிபி களைநேரில் அழைத்துப் பேசினார். தமிழ்நாடு தலைமைச் செயலரைத் தனக்கு நேரடியாக அறிக்கை அளிக்கும்படி கூறினார். இந்த அத்துமீறல்கள் மட்டுமின்றி,ஒரு ஆளுநராக நடந்து கொள்வதை விட்டு, சனாதன இந்துத்துவ சித்தாந்தங்களை பிரச்சாரம் செய்து வருகிறார். சென்னை ஆளுநர் மாளிகை சாமியார்களின் கூடாரமாக விளங்குகிறது. பாஜக நியமனம் செய்யும் ஆளுநர்கள் அந்தந்த மாநிலங்களில் இந்துராஷ்டிர

உருவாக்கத்திற்கான முன்னேற்பாடுகளைக் கவனித்து வருகிறார்கள் என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

ஆளுநர் ஆர். என்.இரவி தமிழ்நாடு அரசுடன் தொடர்ந்து மோதல் போக்கைக் கடைபிடித்து வருகிறார். 2022 நவம்பர் மாதம், தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு குழுவாகக் குடியரசுத் தலைவரைப் பார்த்து, ஆளுநரை நீக்கக் கோரி மனு அளித்தனர். 'மாநிலத்தின் அமைதிக்கு அச்சுறுத்தலாக இருக்கிறார் ' என்று தம் மனுவில் குறிப்பிட்டு இருந்தனர். ஆனாலும் ஆர். என்.ரவி மாற்றப்படவில்லை. அவர் மீது எவ்வித நடவடிக்கையும் வரவில்லை. திமுக மற்றும் அதிமுக ஆகிய இரண்டு கட்சிகளுமே புதிய கல்விக் கொள்கையை நிராகரித்து விட்டன. ஆனால், 2025 ஏப்ரல் 25- 26 ஆகிய நாட்களில், ஆர்.என். இரவி துணைவேந்தர்கள் மாநாட்டை நீலகிரியில் கூட்டி, புதிய கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்துமாறு கூறினார்.

#### சட்டமன்ற மரபுகளை உடைத்தெறிந்த ஆளுநர் இரவி!

சட்டமன்றத்தின் முதல் கூட்டத்தில் படிக்கப்படும் ஆளுநர் உரை என்பது அரசால் தயாரிக்கப்படும்; படிப்பது மட்டுமே ஆளுநர் ; தன் சொந்த விருப்பப்படி சேர்க்கவோ அல்லது அதில் உள்ள பகுதிகளை நீக்கவோ கூடாது; இதுதான் மரபு.

2023- சனவரி மாதம், சட்டமன்ற கூட்டத்தொடரில் ஆளுநர் உரையை அப்படியே படிக்க வேண்டிய ஆளுநர் சில பகுதிகளை நீக்கிவிட்டுப் படித்தார். பெரியார், அண்ணா, அம்பேத்கர், கலைஞர் கருணாநிதி, திராவிட மாடல், காமராஜர், தமிழ்நாடு உள்ளிட்ட சொற்களைக் கொண்ட பகுதியை நீக்கி விட்டுப் படித்தார். சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் முடிந்து, தேசிய கீதம் இசைப்பதற்கு முன்பே பாதியிலேயே வெளியேறினார். வரலாற்றில் முதல்முறையாக சட்டமன்றத்தில் இருந்து ஒரு ஆளுநரே வெளிநடப்பு செய்தார். அரசு அச்சடித்து வழங்கிய ஆளுநர் உரையையே அவைக் குறிப்பில் ஏற்ற வேண்டும் என்று தமிழ்நாடு சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்றியது. ஆளுநர் ஆர்.என்.இரவி தமிழ்நாடு என்று சொல்லக்கூடாது என்றும், தமிழகம் என்றே சொல்ல வேண்டும் என்றும் வலியுறுத்தி கருத்து தெரிவித்தார். தமிழ்நாடு என்ற சொல்லையே வெறுக்கும் ஒருவர் தமிழ்நாட்டின் ஆளுநராக இருக்கிறார்.

2025 சனவரி 6 ஆம் நாள், திமுக அரசு பதவி ஏறிய நாலாவது ஆண்டின் முதல் சட்டமன்றக் கூட்டம் நடைபெற்றது. தமிழ்த்தாய் வாழ்த்துக்குப் பிறகு ஆளுநர் உரையைப் படிக்க எழுந்தார். அதிமுக உறுப்பினர்கள் அரசுக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பினர். ஆளுநர் உரையில் இல்லாதவற்றைச் சேர்த்து ஆளுநர் படித்தார். திடீரென்று அவையிலிருந்து வெளியேறினார். தொடக்கத்திலேயே தேசிய கீதம் பாடாததால் வெளியேறியதாக ஆளுநர் மாளிகை விளக்கம் அளித்தது. ஆளுநர் வெளியேறிய பிறகு ஆளுநர் உரையை பேரவைத் தலைவர் அப்பாவு தமிழில் படித்தார். இவ்வாறு ஆளுநர் உரையாற்றாமல் வெளியேறுவதும் 2025 ஆம் ஆண்டில் நிகழ்ந்துள்ளது.

இதுபோன்றுதான் ஆர்எஸ்எஸ் ஆளுநர்கள் பாஜக ஆளாத மாநிலங்களில் நடந்து கொண்டிருக்கிறார்கள். 2021- ஆம் ஆண்டு, மம்தா பானர்ஜியுடன் தொடர்ந்து மோதலில் ஈடுபட்ட வங்க ஆளுநர் ஜெகதீப் தன்கர் வங்காளத்தில் சட்ட ஒழுங்கு கெட்டுவிட்டது என்று நேரில் கள ஆய்வுகளில் ஈடுபடத் தொடங்கினார். ஓர் ஆளுநருக்கு இது மரபு அல்ல என்று மம்தா பானர்ஜி விமர்சனம் செய்திருந்தார். என்னைத் துப்பாக்கியால் சுட்டாலும் நெஞ்சில் தாங்குவேன் என்று வீர வசனம் ஆளுநர் ஷெகதீப் தன்கர் பேசினார். எந்த கோப்பிலும் கையெழுத்திட மாட்டேன் என்று கோப்புகளை நிலுவையில் வைத்திருந்தார், தனக்குள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி சட்டப்பேரவையை முடக்கப்போவதாக அறிவித்தார். வங்காளத்தில் முதலமைச்சருக்கும் ஆளுநருக்குமான மோதல் பல ஆண்டுகளாக நிகழ்ந்து வருகிறது.

#### ஆளுநருக்கு எதிராக உச்ச நீதிமன்றம் அளித்த பதில்!

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றி ஆளுநர் மாளிகைக்கு அனுப்பப்பட்ட 22 மசோதாக்களின் மீது எந்த முடிவையும் எடுக்காமல் ஆளுநர் ஆர்.என்.இரவி நிலுவையில் வைத்திருந்தார். பல்கலைக்கழகம் தொடர்பான பத்து மசோதாக்களை ஆளுநர் ஆர்.என்.இரவி கடந்த 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் திருப்பி அனுப்பினார். இதே மசோதாவை மீண்டும் நிறைவேற்றி ஆளுநருக்குத் தமிழ்நாடு அரசு அனுப்பி வைத்தது. ஆனால் ஆளுநர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே, தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் இரண்டு ரிட் மனுக்களை தாக்கல் செய்தது.

8.4. 2025 அன்று நீதிபதி ஜே.பி. பர்திவாலா மற்றும் நீதிபதி ஆர். மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு, ஆளுநர், அரசியலமைப்புச் சட்டம் 200- இன்,படி, மசோதாக்களைத் திருப்பி அனுப்பவோ அல்லது குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக ஒதுக்கவோ மட்டுமே முடியும்; அவற்றைக் காலவரையின்றி நிலுவையில் வைக்க முடியாது என்று தெளிவுபடுத்தியது.
சட்டப்பேரவையில் மசோதாவை மீண்டும் நிறைவேற்றி அனுப்பும் போது, அதைக் குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் அனுப்ப முடியாது என்பது பொது விதியாக உள்ளதையும் தீர்ப்பில் ஷே.டி.பர்திவாலா குறிப்பிட்டார்.
ஆளுநர் மசோதாக்களைக் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக அனுப்பியதை நீதிமன்றம் சட்டவிரோதமானது என்று கூறி, அந்த 10 மசோதாக்களுக்கும் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி (சரத்து 142- இன் கீழ்) ஒப்புதல் அளித்தது.
இந்தத் தீர்ப்பின் மூலம், ஆளுநர்கள் மசோதாக்களைக் கிடப்பில் போடுவதற்கான அதிகாரம் இல்லை என்பது உறுதியானது. இது, ஆளுநர்களின் செயல்பாடுகள் குறித்த நீண்டகால விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது. இந்தத் தீர்ப்பு, ஆளுநர்களின் அதிகார வரம்பு குறித்து மற்ற மாநிலங்களுக்கும், குறிப்பாகக் கேரளாவிற்கும், ஒரு வழிகாட்டுதலை வழங்கியது. மேலும் ஆளுநர் ஒரு மாதத்திலும் குடியரசுத் தலைவர் மூன்று மாதங்களுக்குள்ளும் முடிவெடுக்க வேண்டும் என்று வரையறுத்தது.

13 மே 2025 அன்று, குடியரசு தலைவர் திரௌபதி முர்மு அரசியல் சட்ட பிரிவு 143 - இன் கீழ் உச்சநீதிமன்றத்திற்கு 14 கேள்விகளை எழுப்பி இருந்தார். பி.ஆர்.கவாய் உள்ளிட்ட ஐந்து நீதிபதிகள் அடங்கிய அமர்வு 10 நாட்கள் விசாரணையை நடத்தி, 20 நவம்பர் 2025 அன்று திரௌபதி முர்மு அவர்களுக்குப் பதிலை வழங்கியது. ஒரு மசோதாவை ஆளுநர் ஏற்காவிட்டால் அந்த மசோதாவைத் திருப்பி அனுப்ப வேண்டும். அதைக் கிடப்பில் போட முடியாது என்றும், பிரிவு 200 - இன் படி விருப்புரிமை ஆளுநருக்கு உண்டு என்றும், அதன்படி மசோதாவை அவர் திருப்பி அனுப்பலாம் அல்லது குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரை செய்யலாம் என்றும், ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவருக்கு ஒப்புதல் தர காலக்கெடு விதிக்க முடியாது என்றும், ஆனால் குறைந்த அளவிற்கு நீதிமன்றம் குறுக்கிடலாம் என்றும் விளக்கம் அளித்தது.

மாநிலச் சட்டப்பேரவைகளில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்கள் மீது நடவடிக்கை எடுக்காமலும், எந்த பதிலும் அளிக்காமலும் ஆளுநர்கள் கிடப்பில் போட அதிகாரம் இல்லை. மாநில அரசு அனுப்பும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளித்தல், நிராகரித்தல் அல்லது குடியரசுத் தலைவருக்கு அனுப்புதல் ஆகிய மூன்று விருப்பங்களில் ஒன்றை மட்டுமே ஆளுநர் தேர்ந்தெடுக்க விருப்புரிமை பெற்றிருக்கிறார். ஷனநாயக நாட்டில், ஆளுநர்களுக்கான காலக்கெடுவை நிர்ணயிப்பது அரசியலமைப்புக்கு எதிரானது என்றும் கருத்து தெரிவித்தது.
மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுதான் மாநிலத்தின் முதன்மை அதிகார அமைப்பாக இருக்க முடியும். ஆளுநர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு இடையூறு அளிப்பதுபோல செயல்பட முடியாது.

#### ஆட்சிக் கலைப்புகளும் ஆளுநர்களின் அதிகாரங்களும்

இந்தியாவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை அரசியல் சட்ட கூறு 356- ஐப் பயன்படுத்தி இதுவரை 136 முறைகள் ஒன்றிய அரசு கலைத்திருக்கிறது. இவ்வாறு கலைப்பதற்கு ஆளுநரிடம் அறிக்கைப் பெற்றோ, அறிக்கை பெறாமலோ கலைக்கலாம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை கலைத்துவிட்டு நிர்வாகம் செய்ய நியமன ஆளுநர்களுக்கு

அதிகாரம் இருப்பதில் என்ன நியாயம் இருக்கிறது? அவ்வாறு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளமை சனநாயக விரோதமானது.

இந்திய சனநாயகம் ஆளுநர்களின் செயல்பாட்டால் கேலிக்கூத்தாகி வருகிறது. தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களை 6.28 கோடி வாக்காளர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். இத்தனை கோடி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் இணைந்து நிறைவேற்றும் மசோதாவை, எந்தத் தகுதியும் இல்லாத நியமன ஆளுநர் காலவரம்பின்றி முடக்கிப் போடுகிறார். நீதிமன்றமும் அவரை நீக்குவதற்கு உத்தரவிட முடியாது; சட்டமன்றமும் அவரை நீக்க அதிகாரம் படைத்ததல்ல; மக்களும் அவரை நீக்குவதற்கு சட்டபூர்வ வழிமுறைகள் ஏதும் செய்யப்படவில்லை. இந்நிலையில் ஒரு மாநிலத்தின் நிலை என்ன? மாநில அரசு ஒவ்வொரு மசோதாவுக்கும் உச்சநீதிமன்றத்தின் கதவைத் தட்ட வேண்டிய தேவை இருக்கிறது.

ஆளுநருக்கு அளிக்கப்பட்டுள்ள விருப்ப அதிகாரம் சர்வாதிகாரத் தன்மை கொண்டது. ஆளுநரின் விருப்பு அதிகாரம் (Discretionary Powers) என்பது அமைச்சரவையின் ஆலோசனை இல்லாமல், அரசியலமைப்பின் கீழ் தனியாக முடிவெடுக்கும் அதிகாரமாகும். இதில், தொங்கு சட்டமன்றத்தில் முதல்வர் நியமனம், சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பது அல்லது தடை செய்வது, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக மசோதாக்களை நிறுத்தி வைப்பது, குடியரசுத் தலைவர் ஆட்சிக்கு பரிந்துரை செய்வது போன்றவை அடங்கும். அரசியலமைப்புச் சட்டம் கூறு163- ன் படி, சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மட்டுமே இந்த அதிகாரங்களைப் பயன்படுத்த முடியும். விருப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி கடந்த காலத்தில் காலவரையறை இல்லாமல் மசோதாக்களைக் கிடப்பில் போட்டுப் பல மாநில நிர்வாகங்களை ஆளுநர்கள் முடக்கி வந்துள்ளனர்.

இந்திய அரசியல் அமைப்பு சட்ட கூறு 159 (1) - இன்படி, ஆளுநர் கீழ்க்காணும் உறுதிமொழியை ஏற்கிறார்:

"...ஆகிய நான் தமிழ்நாடு மாநிலத்தின் ஆளுநராக உண்மையுடன் செயலாற்றுவேன், மற்றும் இந்திய அரசியலமைப்பு சட்டத்தைப் பாதுகாப்பதற்கும் நிலை நிறுத்துவதற்கும் என் திறமையைப் பயன்படுத்திப் பாடுபடுவேன். மற்றும் இந்த தமிழ்நாடு மாநிலத்தின் மக்களுக்காகவும் அவர்களுடைய நலம் கருதியும் பணியாற்றுவேன் என்று உறுதி எடுத்துக் கொள்கிறேன்."

ஆளுநர்கள் எடுத்துக்கொண்ட உறுதிமொழிக்கு அவர்கள் உண்மையாக இருந்திருக்கிறார்களா?
அரசமைப்புச் சட்டத்தைக் காக்க வேண்டிய ஆளுநர் ஆர். என்.இரவி இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராக நடந்திருக்கிறார். 2024 செப்டம்பர் மாதம் கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டாறு ஊரில் 'வித்யாபூஜன்' பட்டமளிப்பு நிகழ்ச்சியில் பங்கேற்ற ஆளுநர் அரசியலமைப்பு பற்றி கடுமையாக விமர்சனம் செய்து பேசியிருக்கிறார், மதச்சார்பின்மை என்ற சொல் அரசியலமைப்புச் சட்டம் எழுதப்பட்டு 25 ஆண்டுகளுக்குப் பின் செருகப்பட்டது என்று அந்த சொல்லுக்கும், கருத்தியலுக்கும் எதிராகப் பேசுகிறார். அதாவது அச்சொல் தேவையற்றது என்பது அவருடைய கருத்து, அரசியலமைப்பின் மீது உறுதிமொழி எடுத்த ஆளுநர் அந்த அரசியல் அமைப்பில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அதை விமர்சிப்பதும் மதச்சார்பின்மை தேவை இல்லை என்று பேசுவதும், அன்னியமானது என்று விமர்சிப்பதும், அரசியலமைப்புச் சட்டத்தை மீறிய செயலாகாதா? மதச்சார்பின்மை மீது ஆளுநர் இரவி வெறுப்பை வளர்க்கிறார். அவருடைய கன்னியாகுமரி பேச்சு அரசியல் சட்டத்திற்கு எதிரானதாகும். கலவரத்தைத் தூண்டக்கூடியதாகும். அரசியல் சட்ட கூறு - 159 - இன் படி, அரசியல் சட்டத்தைப் பாதுகாப்பதாக, பின்பற்றுவதாக, நிலைநாட்டுவதாக, மக்களுக்குச் சேவை செய்வதாக, மக்கள் நலனுக்கு அர்ப்பணிப்பதாக, உறுதிமொழி எடுத்துவிட்டு, அரசியல் சட்டத்தையே விமர்சனம் செய்வது எப்படி நியாயமாகும்?

**இந்துத்துவ பிரச்சாரம் செய்யும் ஆளுநர்!**

இந்து தர்மம் தான் பாரத நாட்டை உருவாக்கியது; பாரதமும் இந்து தர்மமும் பிரிக்க முடியாதது என்கிறார். முகலாயர்களும் ஆங்கிலேயர்களும் சனாதன தர்மத்தை அழிக்க முயன்றனர் என்றும், சுதந்திரத்திற்குப் பின் சனாதன தர்மம் எழுச்சி பெறும் என்று நினைத்ததாகவும், வெள்ளைக்காரர்கள் சென்ற பிறகு பல ஏமாற்று வேலைகள் இங்கு நடந்தன என்றும், தவறான கோட்பாடுகள் நமக்குச் சொல்லப்பட்டன என்றும், அதில் முக்கியமானது மதச்சார்பின்மை என்றும் கூறியிருக்கிறார். சில சமூகங்களைச் சேர்ந்தவர்களைத் திருப்தி படுத்த அந்த வார்த்தை சேர்க்கப்பட்டது என்றும் ஆளுநர் இரவி பேசியிருக்கிறார். இந்திய அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ள எந்தச் சொல்லையும் எதிர்க்க ஓர் ஆளுநருக்கு உரிமையில்லை. ஆளுநர் இரவி மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அவரை ஆளுநர் பதவியில் இருந்து குடியரசுத் தலைவர் நீக்க வேண்டும். ஆனால் கோளாறு செய்வதற்காகவே அனுப்பப்பட்டிருக்கக் கூடிய ஆளுநர் ரவி எது பேசினாலும் எது செய்தாலும் அவர் மீது எந்த நடவடிக்கையும் வராது.

ஆளுநர் இரவியின் அடாவடி நடவடிக்கைகளையும், தமிழ்நாட்டுக்கு எதிரான அவருடைய வேலைகளையும் கண்டு அனைவருமே அதிர்ச்சி அடைந்திருக்கிறார்கள். கடந்த 2025 ஆகஸ்ட் 13 அன்று, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் ஜீன் ஷோசப் என்ற மாணவி ஆளுநர் கையால் பட்டத்தைப் பெற மறுத்து, துணைவேந்தர் கையால் பட்டத்தைப் பெற்றுச் சென்றார். அதற்குக் காரணமாக, "ஆளுநர் தமிழ்நாட்டுக்கும் தமிழக மக்களுக்கும் எதிராக செயல்படுவதால் அவர் கையால் பட்டத்தைப் பெறவில்லை" என்று அவர் கூறினார். அவரைத் தண்டித்து விட முடியுமா என்ற முயற்சியில் சங்கிகள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**ஆளுநர் என்ற பதவியே ஒழிக்கப்பட வேண்டும்!**

ஜவஹர்லால் நேருவின் சகோதரி விஜயலட்சுமி பண்டிட் மகாராஷ்டிராவின் ஆளுநராக சிறிது காலம் இருந்து பதவியைத் துறந்தார். "ஆளுநர் பதவியே பயனற்றது, அரசமைப்பு சட்டத்தில் இருந்தே ஆளுநர் பதவி நீக்கப்பட வேண்டும் " என்று அவர் கருத்தறிவித்தார்.

இந்தியக் குடியரசு அரசியல் சட்டம் செயல்பாட்டில் இருந்து வந்திருக்கும் கடந்த 75 ஆண்டுகள் அரசியல் அனுபவத்திலிருந்து, மாநிலங்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆளுநர் என்ற பதவி மாநிலங்களைத் துன்பப்படுத்த பயன்பட்டு இருக்கிறதேயொழிய, எந்த வகையிலும் நிர்வாகத்திற்கு உதவியாக இருந்ததில்லை. ஆளுநர் செய்து கொண்டிருக்கும் வேலையை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியே செய்துவிடலாம். அல்லது மாநில அளவில் வேறு ஏற்பாடுகள் செய்து கொள்ளலாம். ஆளுநர் என்ற பதவி தொடர்ந்து இருப்பதற்கு எந்த நியாயப்படும் இல்லை. ஒன்றிய அரசின் கையாளாக இருந்து, கங்காணியாக இருந்து, மாநிலங்களை ஒடுக்குவதற்குதான் ஆளுநர்கள் இருக்கிறார்களேயொழிய ஒன்றிய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே பாலமாக அவர்கள் இருந்ததில்லை. மேலும், இந்திய அரசியல் சட்டம் எழுதப்பட்டபோது அதில் பங்கேற்ற அறிஞர்களும் தலைவர்களும் கனவு கண்டவாறு அறிஞர்கள், தகுதியானவர்கள், அரசியல் தொடர்பற்றவர்கள் ஆளுநர்களாக நியமனம் செய்யப்படவில்லை. ஆளுநர் என்ற பதவி நாட்டுக்குத் தேவையில்லை என்று அறிஞர் அண்ணா கூறியிருக்கிறார். அத்தகைய கருத்தைப் பல அறிஞர்கள் வெளிப்படுத்தி இருக்கின்றனர்.
நியமனப் பதவியில் உள்ள ஆளுநர், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை நோக்கி சாட்டையைச் சொடுக்குவது அவமானகரமானது. அரசின் அதிகாரங்களில் தலையிடுவது அடாவடித்தனமானது.
மாநில நிர்வாகத்திற்கு ஓர் அலங்காரத் தலைவரைத் தெரிவு செய்யும் பொறுப்பையும் அவ்வாறு தெரிவு செய்யும் முறையையும் அந்தந்த மாநிலங்களே முடிவு செய்து கொள்ளலாம். இறையாண்மை பறிக்கப்பட்டு மாநிலங்களாக சிறுத்துக் கிடக்கும் தேசிய இனங்களை அடக்கி வைப்பதற்காக அனுப்பப்பட்டிருக்கும் ஆளுநர் என்பவர் தேசிய இன அடிமைத்தனத்தின் அடையாளச் சின்னம்!
அந்தப் பதவி உடனடியாக ஒழிக்கப்பட வேண்டும்! இது குறித்த தெளிவு அத்தனை அரசியல் கட்சிகளுக்கும், அமைப்புகளுக்கும் தேவை!

## இப்படிப்பட்ட காட்சிக்களுக்காகவே, இந்த மாதிரியான படங்களைத் தடை செய்ய வேண்டும்.

கந்தன் மலை திரைப்படத்தின் சிலசில காட்சிகள் *ரீல்சாக* வெளி வந்துள்ளன. அந்தக் காட்சித் துண்டுகளில், படு *அபத்த*மான வசனங்களோடு முழுக்க முழுக்க சங் பரிவாரங்களின் வன்ம அரசியலைப் பேசுகிறார்கள். ஒரு காட்சியில் எச் ராஜா, தென்னிந்திய பார்வர்டு பிளாக் திருமாறன் நடித்த காட்சியைப் பார்க்க நேர்ந்தது. காதல் திருமணம் பற்றி ஆணாதிக்கச் சிந்தனையோடு பேசக்கூடிய *அபத்த*மான காட்சி அது.

அதில் திருமாறன் பேசுகிறார், "இப்படித்தான் உடுமலைப்பேட்டையில் ஒரு பொண்ணுக்கு கல்யாணம் செஞ்சு வச்சீங்க. திரும்ப அடுத்தடுத்து செஞ்சு வச்சீங்க. ஒரு பொண்ணுக்கு ஆயிரம் தடவையா திருமணம் செய்து வைப்பீங்க" என்று பேசுகிறார். யாரை மனதில் வைத்து எடுக்கப்பட்டுள்ள காட்சி என்பது அனைவருக்கும் தெரியும். தோழர் உடுமலை கௌசல்யா அவர்களைக் கொச்சைப்படுத்திப் பேசும் காட்சிஅது.

ஒரு பெண் தனக்கு ஏற்ற துணைவரைத் தேடுவது என்ன தவறு? அது அவருடைய உரிமை. கணவர் சாதி ஆணவத்தால், சாதி வெறியால் படுகொலை செய்யப்பட்ட பிறகு, மறுமணம் செய்து கொள்வதில் என்ன தவறு இருக்கிறது? கௌசல்யாவின் திருமணங்கள் குறித்துப் பேசும் திருமாறனும், எச்.ராஜாவும், ஆண்கள் எத்தனைப் பேர் பலதார மணம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று பேசத் தயாரா? திருமாறன் மதிக்கக் கூடிய பார்வர்டு பிளாக் கட்சியின் அகில இந்தியத் தலைவராக இருந்த திரு. பி.கே.மூக்கையாதேவர் எத்தனைத் திருமணங்கள் புரிந்தார் என்ற வரலாறு தெரியுமா? *பலதார* மணம் செய்ததனால் நாம் மூக்கையாத்தேவரை இழிவாகப் பேசி விட முடியுமா? ஆண்களுக்கு ஒரு நீதி, பெண்களுக்கு ஒரு நீதியா?

திருமணம் என்பது அவரவர் விருப்புரிமை சார்ந்தது. உங்கள் சாதி சமய *சம்பிரதாயங்களை* பெண்களுக்கு மட்டும்தான் இணைத்துப் பார்ப்பீர்களா? நீங்கள் வழிபடும் திரௌபதி அம்மன் எத்தனை ஆடவர்களைத் திருமணம் செய்தாள் என்று புராணத்தில் நீங்கள் அறிந்ததில்லையா? ஐவரைத் திருமணம் செய்து கொண்ட திரௌபதியைப் பற்றி எச் ராஜாவும், திருமாறனும் பேசுவார்களா? கோபியர்களோடு கொஞ்சிக் கூடிக் குலாவிய கண்ணனின் *லீலைகள்* குறித்து காட்சி அமைப்பார்களா?

ஒருவர் சட்டப்படி மணமுறிவு பெற்றுக் கொண்டு மறுமணம் செய்து கொள்ளலாம் என்பது இந்திய அரசியலமைப்புச் சட்டம் நமக்கு வழங்கியுள்ள உரிமை. அதை ஆண்கள் மட்டும் பயன்படுத்திக் கொள்ளலாமாம். பெண்கள் பயன்படுத்தினால் மிகக் கேவலமாகப் பேசுவார்களாம். இப்படிப்பட்ட காட்சிக்களுக்காகவே, இந்த மாதிரியான படங்களைத் தடை செய்ய வேண்டும்.

## இந்து ரத்தம் ஓடுகிற கள்ளர் மறவர்களே ஒன்றிணைந்து வாருங்களாம்! அட முட்டாள் சங்கிப் பயலே!

இரத்தத்தில் *ஏ பாசிடிவ் , பி பாசிடிவ்* என பல்வேறு வகைகள்தாம் இருக்கிறதென்று அறிவியல் கூறுகிறது. இந்த முட்டாப் பயல் மாணிக்கவேல் "இந்து ரத்தம்" என்று உளறுகிறான்.

நாமெல்லாம் ஒரே சாதி, நாமெல்லாம் இந்துக்கள் என்று கூறுபவர்களே!

ஏழை இந்து கள்ளர் மறவர்களுக்கு, எந்தப் பணக்கார கள்ளர் மறவர் பெண் கொடுத்து, பெண் எடுக்கிறான். உசிலம்பட்டி மதுரை இராமநாதபுரத்தில், திருநெல்வேலி பகுதிகளில் இருக்கிற ஏழை தேவமார் சமூகத்தைச் சேர்ந்த குப்பனுக்கும் சுப்பனுக்கும் சேதுபதி வீட்டிலேயோ, சிவகங்கை *சமஸ்தானத்*திலேயோ அல்லது புதுக்கோட்டை தொண்டைமான் குடும்பத்திலேயோ அல்லது சிங்கம்பட்டி *ஜமீன்* குடும்பத்திலேயோ பெண் கொடுத்து பெண் எடுப்பார்களா? உக்கடை தேவர் வீட்டிலும், பூண்டி வாண்டையார் வீட்டிலும் ஏழைத் தேவமார்கள் சம்பந்தம் முடித்து விட முடியுமா? இருவரும் ஒரே சாதி தானே. ஒரே இந்து ரத்தம் தானே. ஏன் கொடுக்க மறுக்கிறார்கள்?

ஓ. பன்னீர்செல்வமும், வேலம்மாள் முத்துராமலிங்கமும் மறவர்கள் என்பதற்காக அல்லது இந்துக்கள் என்பதற்காக, ஏழை இந்து மறவர் வீடுகளில் மண உறவு வைத்துக் கொள்வார்களா? ஏழை இந்து கள்ளர் மறவர்களை வாட்ச்மேன் வேலைக்குக் கூட எடுக்க மாட்டார்கள்.

எனக்குத் தெரிந்து கோவையிலே ஒரு *பிரபலமான வக்கீல்*. கள்ளர் சமூகத்தை சேர்ந்தவர். என்னிடம் ஒருமுறை பேசும்போது கூறினார், "என் தகுதி *அந்தஸ்துக்குக்* கள்ளர் இனத்திலேயே பெண் இல்லை" என்று. எங்கே போயிற்று உன் சாதியும் மதமும்?

எத்தனையோ தேவமார்கள் கூலித் தொழிலாளியாகவும், மூட்டை சுமப்பவர்களாகவும், *ஹோட்டல் சர்வர்*களாகவும், காய்கறி விற்பவர்களாகவும், ஏழை *விவசாயி*களாகவும், தினக் கூலிகளாகவும் இருக்கிறார்களே. அவர்களும் உங்கள் சாதி தான்; அவர்களும் உங்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள்தாம். உங்கள் பாஷையிலே சொன்னால் அவர்களுக்குள் ஓடுவது இந்து இரத்தம்தான். ஒரே சாதியாக இருந்தாலும் ஒரே மதமாக இருந்தாலும் நீங்கள் பணக்காரர்கள்; அவர்கள் ஏழைகள். உங்கள் வசதிக்குத் தகுந்த இடத்தில்தான் உங்கள் எல்லா உறவுகளும். ஆனால் ஏதாவது கலவரம் செய்ய வேண்டும் என்றால், காரியமாக வேண்டுமென்றால் உடனடியாக "நான் உன் சாதிக்காரன்! உன் மதத்துக்காரன்" என்று சுயநலப் பேயாக கத்துகிறீர்கள்.

ஒரே சாதிக்குள்ளேயே ஏழைப் பணக்கார ஏற்றத்தாழ்வுகள், வேறுபாடுகள் இவற்றைக் கணக்கில் கொண்டு தானே உங்கள் உறவுகள் எல்லாம் இருக்கிறது. பின் என்ன வெங்காய மயிருக்கு சாதி, மதம்?

இந்து என்று சொல்லிக் கொண்டு வரும் எச். ராசா பார்ப்பான், ஒரு மறவர் வீட்டிலேயோ அல்லது கள்ளர் வீட்டிலயோ அல்லது பறையர் வீட்டிலேயோ பெண் கொடுத்து பெண் எடுப்பாரா?

நயினார் நாகேந்திரன்களும், அண்ணாமலைகளும், வானதி சீனிவாசன்களும், தமிழிசைகளும் அவரவர் சாதிக்குள்ளே இருக்கின்ற அவரவர் மதத்துக்குள்ளே இருக்கின்ற ஏழை எளியவர்களின் வீடுகளில் மண உறவு வைத்துக் கொள்வார்களா? வைத்துக்கொள்ளவே மாட்டார்கள். தங்கள் தகுதிக்கு *அந்தஸ்துக்கு* உரிய இடங்களைத்தான் தேர்வு செய்வார்கள். எனில் இவர்களின் சாதி மதப் பற்று எங்கே போயிற்று?

ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்வோம். நாம் வேறு; அவர்கள் வேறு. நாம் ஏழை எளிய பாட்டாளி வர்க்கம். அவர்கள் அதிகாரம் படைத்த, வசதி படைத்த பணக்கார வர்க்கம். என்னதான் கூழைக்கும்பிடு போட்டு குட்டிக்கரணம் அடித்தாலும், உங்களை நாய் போல்தான் நடத்துவார்கள். உங்களோடு எந்தக் காலத்திலும் மண உறவு கொள்ள மாட்டார்கள். உங்களைத் தன் சாதிக்காரனாகவோ அல்லது தன் மதத்துக்காரனாகவோ நினைக்கவே மாட்டார்கள். நிலைமை இப்படி இருக்கும் போது நீயும் நானும் ஒரே சாதி, ஒரே மதம் என்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது.

இதேபோல் இன்னும் எத்தனையோ மாணிக்கவேல்கள் வந்து சாதி மதங்களைக் கூறிக்கொண்டு, உங்களை அடியாட்களாகப் பயன்படுத்த நினைக்கிறார்கள்? இவர்களிடம் எச்சரிக்கையாக இருங்கள்!

மனிதத்தை நேசிப்பவர்கள், துயர் வரும் காலத்தில் நம் துன்பத்தைத் துடைப்பவர்கள், நமக்கென்று ஏதாவது *கஷ்டம்* வந்தால் கண்ணீர் வடிப்பவர்கள், எந்தச் சாதியாக இருந்தாலும், எந்த மதமாக இருந்தாலும் அவர்கள் மட்டுமே நமது உறவினர்கள். அவர்கள் மட்டுமே நமது சொந்தக்காரர்கள்.

சாதி மதங்களைக் கூறி நம்மைப் பிரிக்க நினைக்கும் சதிகாரர்களைப் புரிந்து கொள்ளுங்கள்!

மருது பாண்டியன்

# பெரியாரைப் புதுப்பிப்போம்...

தங்க குமரவேல்



பெரியார் தமிழ்த்தேசியத்தின் முன்னோடி ஆவார் 1938 இல் தமிழ்நாடு தமிழருக்கே என்னும் வலுவான முழக்கத்தை எழுப்பியவர் சாதி ஒழிப்பே தமிழர்களின் ஓர்மைக்கு வழி என்பதில் அவர் உறுதியாக இருந்தார். அதற்கு முன்பே 1929 ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் தன் பெயருக்குப் பின்னால் இருந்த நாயக்கர் என்ற சாதிப் பட்டத்தைத் துறந்து ஈ.வெ. இராமசாமி ஆனார். சாதி ஒழிப்பிற்காகச் சடங்கு மறுப்பு, புராண மறுப்பு, இதிகாச மறுப்பு, வேத மறுப்பு, பார்ப்பனிய எதிர்ப்பு அதன் உச்சமாகக் கடவுள் மறுப்பு ஆகிய கொள்கைகளைப் பின்பற்றினார். தனது திராவிடர் கழகத் தொண்டர்களையும் அவ்வாறே பின்பற்றச் செய்தார். மூடநம்பிக்கை எதிர்ப்பு, பெண் விடுதலை, பகுத்தறிவு உள்ளிட்ட முற்போக்குச் சிந்தனையை இயக்கமாக மாற்றியவர் பெரியாரைச் சுருங்க சொல்ல போனால் மக்களை *விஞ்ஞான* மனப்பான்மை உள்ளவர்களாக மாற்ற வேண்டும் என்னும் மார்க்சியக் கடமையைத் தவறாது செய்தவர் பெரியார் எனலாம்.

அதே 1938 ஆம் ஆண்டு நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் அன்னை மீனாம்பாள் உள்ளிட்ட குழுவினரால் பெண் விடுதலைக்காகப் பாடுபட்ட ஈ.வெ.இராமசாமிக்கு பெரியார் என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

குடியரசு இதழில் ஆசிரியர் ஈ.வெ. இராமசாமி நாயக்கர் என்றுதான் 1927 டிசம்பர் 18 வரை குறிப்பிடப்பட்டது. 1927 திசம்பர் 25 குடியரசு இதழ் முதல் நாயக்கர் பட்டம் அகற்றப்பட்டது. சாதி ஒழிப்பும் தனித்தமிழ் நாடும் என் உயிரினும் மேலான இரு கொள்கைகள் என ஆணித்தரமாகக் கூறிச் செயல்பட்டவர் பெரியார்.

1938 இல் ராஜாஜி சென்னை மாகாணத்தில் முதலமைச்சராக இருந்தபோது பள்ளிகளில் இந்தி கட்டாய மொழியாக்கப்பட்டது. அதை எதிர்த்து இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை மக்கள் நடத்தினர். அதைப் பெரியாரும் மறைமலையடிகளும் ஏ.டி.பன்னீர்செல்வம் ஆதரித்தனர். இந்தப் போராட்டம் முதல் மொழிப்போர் என்று அழைக்கப்படுகிறது. இந்தப் போராட்டத்தில்தான் தமிழ்நாடு தமிழருக்கே என்னும் முழக்கம் தமிழ்நாடு முழுவதும் பரவியது.

1939 இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறைச்சென்ற பெரியார் விடுதலையானார் மக்கள் செல்வாக்கு சரிந்திருந்த நீதிக்கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்றார். அவர் பொறுப்பேற்றதும் கட்சி நல்ல வளர்ச்சி கண்டது. கட்சியின் பெரும்பாலான பொதுக்குழு உறுப்பினர்கள் கல்வி அறிவு பெற்றவர்களாகவும் செல்வந்தர்களாகவும் இருந்ததால் பெரியாரின் தலைமையை ஏற்காமல் கட்சியைவிட்டு விலகினர். 1944 இல் நீதிக்கட்சியின் பெயரைத் திராவிடர் கழகம் என்று மாற்றினார். நீதிக்கட்சித் தேர்தலில் போட்டியிட்டது திராவிடர் கழகம் தேர்தலில் போட்டியிடாது சமூகச் சீர்திருத்த இயக்கமாகச் செயல்படுகிறது.

திராவிடர் கழகத்தின் கொள்கைகள் நகர மக்களிடமும் கிராம மக்களிடமும் மாணவர்களிடமும் வெகுவாகப் பரவியது. பார்ப்பனர்களின் அடையாளங்களான இந்தி, சமஸ்கிருதம், மதச் சடங்குகள் போன்றவை மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டன. 1949 முதல் திராவிடர் கழகத்தினர் தங்கள் செயல்பாடுகளான மூடநம்பிக்கை ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு, பெண் உரிமை, பெண் கல்வி, கைம்பெண் மறுமணம், சாதி மறுப்புத் திருமணம் உள்ளிட்ட சீர்திருத்த நடவடிக்கைகளில் கவனம் செலுத்தினர். அதே 1949 ஆம் ஆண்டு செப்டம்பர் 16 அன்று திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் அரசியல் கட்சி அறிஞர் அண்ணாவால் தொடங்கப்பட்டது. பெரியாரின் தளபதியாக இருந்த அறிஞர் அண்ணா பெரியாரிடம் கருத்து வேறுபாடு கொண்டு பிரிந்து சென்று திமுகவைத் தொடங்கினார். திராவிட நாடு அல்லது தனித்தமிழ் நாடு பெரியாரின் கொள்கையாக இருந்தது. டெல்லி அரசிடம் இணக்கமாகப் போவது அண்ணாவின் கொள்கையாக இருந்தது. அதுவே பிரிவினைக்குக் காரணமாக அமைந்தது. பெரியார் மணியம்மை திருமணத்தையும் திமுகவினர் விமர்சித்தனர். திராவிட நாடு திராவிடருக்கு என்று பெரியார் முழங்கிக் கொண்டிருந்தபோது, மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்று முழங்கத் தொடங்கினார். பெரியார் கடவுள் மறுப்பு பேசிக் கொண்டிருந்தபோது, அண்ணா ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்னும் திருமூலர் திருமந்திரத்தைத் தனது கட்சியான திமுகவின் கொள்கையாக அறிவித்தார்.

1957 இல் நடை பெற்ற தேர்தலில் பெரியார் காங்கிரசை ஆதரித்தார். காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது. திமுக 15 இடங்களைப் பிடித்தது. 1956 இல் பெரியார் பெங்களூரில் நடைபெற்ற அனைத்திந்திய அலுவலக மொழி மாநாட்டில் கலந்து கொண்டார். இந்திக்கு மாற்றாக ஆங்கிலத்தை அலுவலக மொழியாக அரசிடம் வழியுறுத்திப் பெற்றுக்கொள்ள அறிவுறுத்தினார்.

முதன் முதலில் திருக்குறள் மாநாடு நடத்தியவர் தந்தை பெரியார் ஆவார். 1949 ஆம் ஆண்டு சனவரி 15 ,16 நாள்களில் சென்னையில் வள்ளுவர் குறள் மாநாடு என்ற பெயரில் அது நடத்தப்பட்டது. திருக்குறளை ஆய்வு செய்வதும் அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதும் இந்த மாநாட்டின் நோக்கங்கள் ஆகும். குறள் தத்துவத்தை விளக்கிடவென்றே நடத்தப்படும் இம்மாநாட்டில் நாம் பங்கு கொண்டு தத்துவங்களை உணர்ந்து தமிழ்ப் பாமர மக்களிடையில் புகும்படி செய்ய வேண்டியது நம் கடமையாகும் என்று மாநாட்டு அழைப்பில் தந்தை பெரியார் கூறுகிறார். இன்று தமிழர்கள் ஒவ்வொருவர் இல்லத்திலும் திருக்குறள் நூல் இடம் பெற்றிருப்பதற்குத் தந்தை பெரியார் திருக்குறளுக்கு ஆற்றிய பணிகளே காரணமாகும்.

1925 மே 2 ஆம் நாள் குடியரசுப் பத்திரிக்கை தொடங்கப்பட்டது. 1928 நவம்பர் 7ஆம் நாள் ரிவெல்ட் என்னும் ஆங்கில வார இதழ் தொடங்கப்பட்டது. 1933 நவம்பர் 20 இல் புரட்சி வார இதழ் தொடங்கப்பட்டது. 1934 ஏப்ரல் 15 இல் பகுத்தறிவு நாளிதழ் தொடங்கப்பட்டது. 1934 ஆகஸ்ட் 20 இல் பகுத்தறிவு வார இதழ் தொடங்கப்பட்டது. 1935 மே 1 ஆம் நாள் பகுத்தறிவு மாத இதழ் தொடங்கப்பட்டது. 1935 சூன் 1 ஆம் நாள் விடுதலை வார இரு முறை தொடங்கப்பட்டது. 1937 சூன் 1 இல் விடுதலை நாளிதழ் தொடங்கப்பட்டது. உண்மை மாத இதழ் மற்றும் 1971 செப்டம்பர் 1 தொடங்கப்பட்டது. தி மார்டன் ரேசனலிஸ்ட் ஆங்கில மாத இதழ் தொடங்கப்பட்டது. இத்தகைய இதழ்களுக்கு ஆசிரியராக இருந்து தமிழ் சமூகத்திற்குத் தந்தை பெரியார் தொண்டு செய்தார். தமிழ்நாடு மட்டும் இன்றி மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, மொரிசியஸ், வட அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளில் உள்ள தமிழர்களிடையே பெரியாரின் தாக்கம் இன்றும் உள்ளது.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை 20/01/1935 இதழில் இருந்து பெரியார் நடைமுறைப்படுத்தினார். தமிழில் அச்சுக் கோப்பதற்கு எளிதாகவும் தட்டச்சு செய்ய எளிதாகவும் வேண்டாத எழுத்துருகளை நீக்கி விட்டுச்

சீர்மை எழுத்துகளை உருவாக்கினார்.

தனது இதழ்களான குடியரசு, புரட்சி, பகுத்தறிவு, விடுதலை ஆகியவற்றில் எழுத்துச் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்தினார். அதே நேரத்தில் அண்ணா நடத்திய திராவிட நாடு இதழ் மற்றும் திமுகவினர் நடத்திய பல இதழ்களில் பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம் நடைமுறைப்படுத்தப் படவில்லை.

பெரியாரின் எழுத்து சீர்திருத்தம் 1978 இல் அரசாணை வெளியிட்டு 1979 இல் அரசு அலுவலகங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதைச் செய்தவர் தமிழ்நாட்டின் அப்போதைய முதல்வர் எம்ஜிஆர்.

தமிழ்த் தேசியத்தை வெறும் இனக்குழுவாதமாகச் சுருக்காமல் பெரியார் தடுத்தாட்கொண்டார். பெரியாரின் தமிழ்த்தேசியம் - சமூகநீதி, சுயமரியாதை, சாதி ஒழிப்பு, பெண் விடுதலை, சனநாயகம், சோசலிசம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். பெரியாரின் ஓங்கிய முன்னெடுப்புகளால்தாம் தமிழர்களின் நெஞ்சங்களில் மேலோங்கியது. தமிழா இன உணர்வு கொள் என்னும் பெரியாரின் முழக்கம் பட்டி தொட்டியெல்லாம் பரவியது. பெரியாரின் தமிழ்த்தேசியத்திற்கு அடிப்படை சாதி ஒழிப்பே ஆகும். சாதி ஒழிந்தால் தமிழ்த் தேசிய ஓர்மை ஏற்படும் என்பதில் பெரியார் உறுதியாக இருந்தார்.

பார்ப்பனியத்தின் பிடியில் இருந்த பொங்கல் திருநாளை மீட்டவர் தந்தை பெரியார். பொங்கல் விவசாயிகளின் உழைப்பையும் புதிய உற்பத்தியையும் கொண்டாடும் நாளாக பெரியாரால் பார்க்கப்பட்டது. பொங்கலை மதச்சார்பற்ற விழாவாக மாற்றியதோடு அனைத்து மதத்தினரும் பங்கேற்கும் வகையில் தமிழர் திருநாள் என்னும் பெயரைச் சூட்டி தமிழ்த்தேசியத்தோடு பொங்கலை இணைத்தார்.

மக்கள் இன்பத்துக்குப் பண்டிகை ஒரு சாதனமாக இருப்பதால் தமிழர்கள் அவர்களது குடும்பம் கூடிக்குழாவி இன்பம் அடைய ஏதாவது ஒரு பண்டிகை வேண்டுமே அதற்கு என்ன செய்வது என்று கேட்ட காலத்தில் பொங்கல் பண்டிகையைத் தமிழர்கள் பண்டிகையாக கொண்டாடலாம் என்று சுயமரியாதை இயக்கம் விடை கூறியது. இந்தச் செய்தி வந்த ஆண்டு 19/01/1969 ஆகும்.

சட்டம் சாஸ்திரம் சம்பிரதாயம் பழக்கவழக்கங்கள் புராணங்கள் இதிகாசங்கள் இவை எல்லாவற்றிலுமே நம் இழிவு நிலை நிறுத்தப்பட்டுள்ளது. எனவே இவை எல்லாவற்றிலிருந்துமே நம் இழிவு நீக்கமடைந்தாக வேண்டும். மொழியால் மேம்பாடும் வெற்றியும் பெற்று விடுவதாலேயே நமது இழிவும் இழிவுக்கு ஆதாரமான கலாச்சாரமும் ஒழிந்து விடமாட்டா என்று 27/01/1950 அன்று வெளியான விடுதலையில் பெரியார் எழுதுகிறார்.

ஆரியப் பார்ப்பன இந்து மதப் பண்டிகைகளைக் கொண்டாடாதே தமிழர்களுக்கு விழா என்றால் அது பொங்கல்தான் அதுதான் சாதிக்கு அப்பாற்பட்ட விழா. தீட்டு என்கிற ஆரியக் கருத்தாக்கத்தை ஏற்காத விழா. அதுதான் தமிழர்களின் புத்தாண்டு விழா என்று தமிழ்நாட்டின் மூளை முடுக்கெல்லாம் பெரியார் பரப்புரை செய்தார்.

1921 இல் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்க் கடல் மறைமலை அடிகளார் தலைமையில் 500 க்கும் மேற்பட்ட புலவர்கள், அறிஞர்கள் கூடி மூன்று முடிவுகளை எடுத்தனர்.

1. திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டு பின்பற்றுவது.

2. அதையே தமிழர் ஆண்டு என கொள்வது.

3. திருவள்ளுவர் காலம் கி.மு. 31 திருவள்ளுவர் ஆண்டு முதல் மாதம் தை, இறுதி மாதம் மார்கழி. கிழமைகள் வழக்கில் உள்ளவை என்று முடிவு செய்யப்பட்டது.

திருச்சியில் 1937 திசம்பர் 26 இல் தமிழர் மாநாடு நடைபெற்றது. அதன் தலைவர் சோமசுந்தர பாரதியார் அந்த மாநாட்டில் பெரியார், க.சு.பிள்ளை, தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், தமிழ்த்தென்றல் திரு.வி. க, தமிழ்க் கடல் மறைமலை அடிகளார் உள்ளிட்ட தமிழ் அறிஞர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்க் கடல் மறைமலை அடிகளார் சான்றுகளுடன் தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம். பொங்கலே தமிழர் விழா என்று அறுதியிட்டுப் பேசினார் அதை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்று தந்தை பெரியார் கூறியவுடன் மாநாட்டு அரங்கமே அதிர்ந்தது.

தமிழ்த் தென்றல் திரு.வி.க எழுந்து என்னுடைய அருமை நண்பர் ஈ.வெ.இரா. அவர்கள் என்னோடு இருந்து பாடுபட்டவர். நான் தாயாகவும் அவர் தந்தையாகவும் இருந்து சுயமரியாதை இயக்கத்தை வளர்த்தோம் என்று சுயமரியாதை இயக்கத்தின் தலைவர் ஈ.வெ.இரா பொங்கலை ஏற்றுக் கொண்டமைக்கு இந்தத் தமிழகமே பாராட்டுதலைச் செய்வதற்குக் காத்துக்கொண்டிருக்கிறது என்று பேசினார். இப்படிப் பெரியாரும் தமிழ் அறிஞர்களும் சேர்ந்து பொங்கலைத் தமிழ்த் தேசிய விழாவாக மாற்றினர்.

தமிழ்ச் சமூகத்திற்குத் தன்மானமும் எழுச்சியும் பெரியாரின் இடி முழக்கங்களால் தமிழ் இனத்திற்கு ஊட்டப்பட்டன. மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு, சூத்திரன் என்றால் ஆத்திரம் கொண்டு அடி, படிப்புக்குச் சரஸ்வதியை நம்பாதே அறிவாளியையும், ஆசிரியர்களையும் நம்பு, செல்வத்துக்கு இலட்சுமியை நம்பாதே உழைப்பை நம்பு என்பன போன்ற வாசகங்கள் இந்தியாவில் உள்ள அனைத்துத் தேசிய இனங்களுக்கும் பொருந்தும்.

சாதி வளர்ப்பிலும் மறைமுக இந்துத்துவ வளர்ப்பிலும் அக்கறை காட்டும் போலித் தமிழ்த்தேசியர்களுக்குத் தந்தை பெரியாரின் சாதி ஒழிப்பும், கடவுள் மறுப்பும் இடையூறாக உள்ளன. எனவே வரலாற்றுக் கால வரிசைகளை மாற்றிப்போட்டுப் பெரியார் அரசியல் சூழல்களுக்கு ஏற்ப எடுத்த கருத்துகளையும், முடிவுகளையும் வெட்டியும், ஒட்டியும் தங்களுக்கு ஏற்றார் போல் திரித்தும் கூறி பெரியாரை அவதூறு செய்கின்றனர். வரலாறு தெரியாத இளம் தலைமுறையினர் அதை நம்பி ஏமாந்து போகின்றனர். போலித் தமிழ்த்தேசியர்களின் வலையில் இளைஞர்கள் விழுந்தால் தமிழ்நாடு ஒரு நூற்றாண்டுப் பின்னுக்கு இழுக்கப்படும். அதைத் தடுக்க பெரியார் தமிழ்ச் சமூகத்திற்குச் செய்த அனைத்து தொண்டுகள் குறித்த செய்திகளையும் துண்டறிக்கைகளாகவும் சிறு வெளியீடாகவும் மக்களிடம் கொண்டு சேர்ப்பது நமது வரலாற்றுக் கடமையாகும். பெரியாரைத் தமிழ்ச் சமூகத்துக்குப் புதுப்பித்துத் தருவது காலத்தின் கட்டாயமாகும்.

# மொழியினம் நாடு காக்க தமிழரே ! விழிப்பீர் !

உறங்கியபின் விழிப்பதுவே
இயற்கை ஆகும்

உறங்காமல்
மொழியினத்தின்
நாட்டைக் காக்க !

அறத்தாயின் தமிழ்மக்கள்
உறக்க மற்றே

அடுபகையை
வீழ்த்திடவே
எழுமின் ! இன்றே !

இறந்தபிணம்
போலவுமே
உறங்க லுற்றால்

இனமொழியும்
தமிழ்நாடும்
அற்றுப் போகும் !

உறவுதமிழ் உடன்பிறப்பீர் !
உள்ளம் ஒன்றி

உறவற்ற
பகையழிக்க
எழுமின் ! இன்றே !

**புலவர் பழ.தமிழாளன்**
திருச்சிராப்பள்ளி.

பொழிலன்

# சுப்பிரமணிய பாரதியை எவ்வாறு மதிப்பீடு செய்யலாம்?..



எவர் ஒருவரையும் பிறப்பால் மதிப்பிடுவது அறஉணர்வற்றது..

வருணாச்சிரமப் பார்வையுடையவர்களே அனைவரையும் பிறப்பைச் சுட்டி மதிப்பிடுகின்றனர்..

தங்களை இருபிறப்பாளர்கள் என்று ஆரியப் பார்ப்பனர்கள் மதிப்பிட்டுக் கொள்கின்றனர்..

சுப்ரமணிய பாரதியை நாம் பிறப்பால் மதிப்பிடவில்லை. எட்டயபுரம் எனும் சிற்றூரில் சனாதனக் குடும்பத்தில் பிறந்து, அவ் வழக்கங்களை மீறித் தன் 39 அகவைக்குள் எண்ணற்ற அளவில் எழுதியும், தம்மால் முயன்ற அளவில் போராட்ட உணர்வோடு ஈடுபட்டும் வாழ்ந்திருக்கிறார். அவர் குலத்தைக் கருதி அவரை மட்டுமின்றி எவரையும் மதிப்பிடுவதும் புறக்கணிப்பதும் சரியன்று.

ஒருவரின் எழுத்துகள், கருத்துகள், எவ்வகைக் கருத்துகளுக்காக அவர் தன் வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டார், எவற்றில் எல்லாம் உறுதியாக நின்றார் என்பவையே பாரதியை மட்டுமின்றி அனைவரையும் அளவிடுவதற்கான வரையறையாக இருக்க முடியும்..

ஆங்கில வல்லாட்சியை எதிர்த்துப் போராடியவர்கள் பல தரத்தினர்.

பகத்சிங்கையும், காந்தியையும், நேதாசியையும், வ உ சி யையும், ஐதர்அலியையும், திப்பு சுல்தானையும், பட்டேலையும், கோக்கலேவையும், திலகரையும், சவர்க்கரையும் ஒரே அளவீட்டில் அனைவரும் ஆங்கிலேயே வல்லாட்சி அதிகாரத்தை எதிர்த்துப் போராடியவர்கள் என்று அடையாளப்படுத்திவிட முடியாது.

ஆங்கிலேய ஆட்சி அதிகாரத்தை எதிர்த்த நிலையிலும் ஒவ்வொருவரின் இலக்கும் நோக்கமும் செயற்பாடுகளும் வெவ்வேறு வகையின.

ஒவ்வொருவரின் ஈகமும் வலிமையும் வெவ்வேறு தரத்தின.

அப்படி வகைப்படுத்துவதால் எவர் ஒருவரைக் குறைத்து மதிப்பிடுவதாகவும், புறந்தள்ளுவதாகவும் கருத முடியாது.

ஒருவரை அவர் கொண்ட கொள்கையிலும் அவரின் செயற்பாடுகளிலும் அவரை மதிப்பிடுகிறோம். அவ்வாறு மதிப்பிடாமல் பொத்தாம் பொதுவாக அனைவரையும் அடையாளப்படுத்தி நிறுத்துவது குமுக அக்கறையுள்ள மதிப்பீடாக திறனாய்வாகக் கருத முடியாது..

அந்த அளவிலேயே பாரதியாரின் கருத்துகளையும் செயற்பாடுகளையும் திறன்களையும் மதிப்பிட்டாக வேண்டும்.

பிறரை எல்லாம் பெரிதும் பேசாத நிலையில் பாரதி பற்றியான உயர் மதிப்பீட்டைச் செய்து உயர்த்திக் காட்டிய பொழுது, பாரதியைப் பற்றிய திறனாய்வுகள் அதிகம் எழத் தொடங்கின.

அவ்வாறு பாரதியை உயர் மதிப்பீட்டைச் செய்தவர்கள் ஆரியப் பார்ப்பனியக் கருத்தாளர்களாகவும், இந்தியப் பொதுவுடைமைக் கட்சியினராகவுமே இருந்தனர்.

பார்ப்பனர் அல்லாதார் இயக்கக் கருத்துகளை, செயல்பாடுகளை ஏற்க முடியாத நிலையிலேயே ஆரியப் பார்ப்பனர்களுள் சிறந்த செயல்பாட்டாளர்களை, கருத்தாளர்களைப் பொதுவுடைமைக் கட்சியினர் அடையாளப்படுத்த வேண்டிய தேவை அன்றைக்கு ஏற்பட்டது.

எனவே, பாரதி குறித்த மதிப்பீடுகளை இயங்கியல் மதிப்பீடு கொண்ட அறப் பார்வையில் உரையாடியாக வேண்டும்..

பாரதியாரைச் சிலர் கொச்சைப்படுத்தித் திறனாய்வதாக மார்க்சிய இலெனினியத் தோழர்கள் சிலர் வருந்தியும் கண்டித்தும் எழுதுகின்றனர்..

பொதுவுடைமை இயக்கங்கள், அவற்றின் ஆய்வாளர்கள் முறைப்படி ஆய்வு செய்திருந்தால் பிறர் பாரதியாரைக் கொச்சைப்படுத்தி ஆய்வு செய்யவேண்டிய தேவை இல்லை.

வேத, புராணங்களையும், மனுதர்ம, அர்த்த சாஸ்திரங்கள் உள்ளிட்ட ஆரிய இலக்கியங்களையும்கூட அவற்றின் கால அளவுகளையும் உள்ளடக்கங்களையும் முறையாக மார்க்சிரியர்கள் ஆய்வு செய்யவில்லை.

வேதங்களை உச்சி முகர்ந்து 'வேதங்களின் நாடு' என்பதாகக்கூட பெருமைபட்டுக் கொண்டனர் மார்க்சியர்கள் சிலர். **பழந்தமிழ் இலக்கியங்களை, இலக்கிய வரலாற்றை டி. டி. கோசாம்பியும், நம்பூதிரிபாடும் குறைவுப்படுத்தியே எழுதியுள்ளனர்.** அவற்றைத் திறனாய்வதற்குத் தமிழ்நாட்டு மார்க்சியர்களுக்குத் துணிவில்லை.

**இந்த நிலையில்தான் மார்க்சிய ஆய்வாளர்கள் முறையாகப் பாரதியையும் திறனாயவில்லை என்று நாம் குறைபட வேண்டியிருக்கிறது.**

வல்லரசிய எதிர்ப்பு கொண்டிருந்தார்கள் என்பதற்காகவே ஒருவரை முற்றும் முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாது.

புரட்சிவயக் குமுக மாற்றத்திற்கு வல்லரசிய எதிர்ப்பு மட்டுமே அளவுகோல் அன்று.

பகத்சிங்கை காந்தி ஏற்றுக் கொள்ளவில்லை. திப்பு சுல்தானை, ஐதர் அலியை ஆரியப் பார்ப்பனியக் கருத்தாளர்கள் எவரும் ஏற்றுக்கொள்ளவில்லை.

சவர்க்கர், திலகர் பிரித்தானிய எதிர்ப்பு கொண்டவர்கள் என்பதற்காக முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாது.

மார்க்சிய இலெனினியத் தோழர் ஒருவர் இப்படி எழுதுகிறார்..

> ***“பாரதி பற்றி எழுப்பும் எல்லா கேள்விகளுக்கும் பதில் அவர் ஏகாதிபத்திய சகாப்தத்தில் வாழ்ந்தார். மார்க்ஸ் காலமான முதலாளித்துவ வரலாற்றுக் கட்டத்தில் வாழவில்லை.***
>
> ***ஏகபோக நிதி மூலதன ஆதிக்கம் செய்யும் வரலாற்றுக் கட்டத்தில் வாழ்ந்தார். தனது வரலாற்றுக் கடமையைச் சரியாக நிறைவேற்றினார். அதாவது நாட்டின் அனைத்து இழிவுகளுக்கும் காரணம் ஏகபோக நிதி மூலதனம் என்பதைப் புரிந்து கொண்டிருந்தார். உமர் முக்தார் இஸ்லாமிய வேதத்தைக் கையில் ஏந்திக் கொண்டுதான் இத்தாலிய ஏகாதிபத்திய ஆதிக்கத்தை எதிர் கொண்டார்.***
>
> ***நமக்கு ஏகாதிபத்தியம் என்றால் என்ன? என்பதை லெனின்தான் விளக்கியுள்ளார்.***
>
> என்பது அவர் கருத்து.

பாரதி அவரின் வரலாற்றுக் கடமையைச் சரியாகச் செய்துள்ளார் என்று அவர் நிறைவடைகிறார்.

பாரதி முற்றிலும் தவறானவர் என்றோ அவருக்கு வல்லரசு எதிர்ப்புணர்வு இல்லை என்றோ எவரும் பேசவில்லை.

அந்த அளவில் மட்டுமின்றி எளிய தமிழில் எழுதியது, தமிழை, தமிழ் இலக்கியங்களை, தமிழ்நாட்டைச் சில இடங்களில் பாராட்டி எழுதியது, உருசியப் புரட்சியை வரவேற்றது, தென் ஆப்பிரிக்காவின் கரும்புத் தோட்டத்தில் நடந்த கொடுமைகளைக் கண்டித்தது

உள்ளிட்ட அவரின் சிறப்புகளை ஏற்கவும் பாராட்டவுமே செய்கிறோம்.

அதே வேளையில் அவரிடம் இருந்த ஆரியப் பார்ப்பனிய அதிகார வெறிக் கருத்துகளைச் சுட்டிக்காட்டாமல் விலகிப் போவது மார்க்சிய நெறிக்குரியது அன்று..

இசுலாமிய வேதப் புத்தகத்தைக் கையில் ஏந்திக் கொண்ட உமர் முக்தாருக்கும், மூச்சுக்கு மூச்சு வேதங்களை பற்றி, ஆரியப் பார்ப்பனிய பாரதம் பற்றி, தெய்வபாஷையாகச் சமஸ்கிருதம் ஏற்கப்பட வேண்டும் என்பது பற்றி, சேதாரமில்லாதா இந்துஸ்தானைப் படைப்பது குறித்துக் கருத்து கொண்டிருந்த பாரதிக்கும் வேறுபாடுகள் உண்டு..

மார்க்சிய ஆய்வுகள் அடிப்படையில் நேர்மையைக் கடைபிடிக்கப்பட வேண்டும். அந்த வகையில் பாரதி மட்டுமல்லர், அனைவருமே திறனாய்வுக்கு உரியவர்கள்தாம்.

சுப்ரமணிய பாரதி வாழ்ந்த காலம் 39 ஆண்டுகள் ஆயினும் அவர் பாடல்களும் கட்டுரைகளும் எழுதிய காலம் 17 ஆண்டுகளே..

ஏறத்தாழ 310 பாடல்கள் எழுதி இருக்கிறார். அவற்றுள் 53 பாடல்கள் தேசம் பற்றிய பாடல்கள். புதிய பாடல்களுக்குள்ளும் சில பாடல்கள் தேசம் பற்றியவை.

பாரதியின் கட்டுரைகளின் எண்ணிக்கையும் கணிசமானவை. சுதேசமித்திரன், சக்கரவர்த்தினி, ஞானபாநு, இந்தியா, விஜயா, சூரியோதயம், பாரதமாதா உள்ளிடம் இதழ்களில் அவர் கட்டுரைகள் எழுதினார்.

இந்தியாவை பாரதம் என்று அழைப்பதே அவரின் விருப்பம் மட்டும் அன்றி நோக்கமாகவும் இருந்தது.

தேசபக்திப் பாடல்கள் தலைப்புகளிலும் பிற தலைப்புகளிலும் அவர் எழுதிய பாடல்கள் பெரும்பாலானவற்றில் பாரத நாடு, பாரத தேசம், பாரத தேவி, பாரதமாதா, பாரதப் பொன்னாடு, பாரதமாதேவி, பாரத ஜனங்கள், போகின்ற பாரதம், வருகின்ற பாரதம், பாரத சமுதாயம், பாரத மணித்திருநாடு, பாரதவாசி - என்றவகையில்தான் அடையாளப்படுத்துகிறார். இந்தியா - என்று தம் பாடல்களுள் மூன்று இடங்களில் மட்டுமே குறித்திருக்கிறார்..

செந்தமிழ்நாடு, தமிழ்த்தாய், தமிழ், தமிழ் மொழி வாழ்த்து, தமிழ் சாதி, வாழிய செந்தமிழ் என்று ஆறு பாடல்கள் மட்டுமே தமிழ் குறித்து எழுதி இருந்தாலும் அந்தத் தமிழும் உயர் ஆரியத்திற்கு நிகரென வாழ்ந்தேன் என்றுமே குறிப்பிடுகிறார்.

மொழி குறித்து முழுக்க முழுக்கச் சமஸ்கிருதத்தையும் இந்தியையுமே முதன்மையாக எண்ணுகிறார். ஆர் எஸ் எஸ் இன் பாஜகவின் திட்டத்தை 1906 ஆம் ஆண்டிலேயே அவர் வலியுறுத்தி இருப்பது கவனத்திற்குரியது.

> ***“ஸம்ஸ்கிருத பாஷை மிகவும் அற்புதமானது. அதைத் தெய்வ பாஷை என்று சொல்வது விளையாட்டன்று. மற்ற சாதாரண பாஷைகளை எல்லாம் மனித பாஷை என்று சொல்லுவோமானால், இவை அனைத்திலும் சிறப்புடைய பாஷைக்குத் தனி பெயர் ஒன்று வேண்டும் அல்லவா? அதன் பொருட்டே அதை தெய்வ பாஷை என்கிறோம்.”***

என்று தன் கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

> ***“ஆதி சிவன் பெற்று விட்டான்- என்னை***
> ***ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்***
> ***வேதியன் கண்டு மகிழ்ந்தே - நிறை***
> ***மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்”***

என்று தமிழ் இலக்கணத்தை ஆரிய மைந்தன் செய்து கொடுத்ததாக எழுதி இருக்கிறார்.

> ***“தமிழ் பாஷைக்கோ இலக்கணம் முதல் முதலாக அகஸ்தியராலும், அவருடைய சிஷ்யராகிய திரனதூமாக்கி (தொல்காப்பியர்) என்ற ஆரிய முனிவராலுமே அமைத்துக் கொடுக்கப்பட்டது என்பதும் மெய்யே. அதனின்றும் தமிழ் இலக்கணம் பெரும்பாலும் ஸம்ஸ்கிருத இலக்கணத்தை அனுசரித்தே சமைக்கப்பட்டிருக்கிறது என்பதும் மெய்யே”***

என்றும் எழுதியுள்ளார்.

சமசுக்கிருதக் கல்வெட்டு கிபி முதல் நூற்றாண்டுக்குப் பிறகே உள்ளது என்பதும், சமசுக்கிருதம் எழுத்து வழி முதலில் கிபி ஐந்தாம் நூற்றாண்டில் வட்டெழுத்துகளிலும், 14ஆம் நூற்றாண்டு அளவிலேயே தேவநகரி எழுத்திலும் எழுதப்பட்டுள்ளது என்பதும் உலகறிய நிறுவப்பட்ட நிலையில் சமஸ்கிருத இலக்கணத்திலிருந்துதான் தமிழ் இலக்கணம் எழுதப்பட்டது என்பது மிகப்பெரும் இட்டுக்கட்டல்.

சாதிகள் ஒழிப்பு பற்றி ஒரு பக்கம் பேசிக்கொண்டே, மறுபக்கம் சாதிகள் தேவைகள் என்று வலியுறுத்துவதோடு, தாழ்த்தப்பட்ட மக்களைக் குறிப்பாக **பறையர்களை, புலையர்களை ஈனர் என்றும் தீயர் என்றும் இழிவுபடுத்திப் பல இடங்களில் எழுதி இருக்கிறார்..**

யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது என்று ஓரிடத்தில் எழுதிவிட்ட அதே போது, **ஆரியம் என்கிற சமஸ்கிருதமே உயர்வானது தெய்வ பாஷையானது என்று பல இடங்களில் பதிவு செய்திருக்கிறார்.**

யாம் அறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவனைப் போல் இளங்கோவைப் போல் யாரும் பிறந்ததில்லை என்று ஓர் இடத்தில் அறிவித்து விட்டு, எண்ணற்ற இடங்களில் **வேத புராணங்களையும் சாஸ்திரங்களையுமே உச்சி மீது வைத்துக் கொண்டாடுகிறார்.**

தமிழ்நாட்டில் சாஸ்திரங்கள் இல்லை எனவே தான் தமிழர்கள் இந்த அளவு இருக்க வேண்டும் என்பது ஈசனுடைய விதி - என்று வெளிப்படையாகப் பதிவு செய்திருக்கிறார்.

சேதாரம் இல்லாத இந்துஸ்தானைத் தெய்வம் என்று கும்பிட வேண்டுமென ஓடி விளையாடு பாப்பாவிற்கு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்..

ஆக, அடிப்படையில் அவர் ஆரியப் பார்ப்பனிய அதிகாரத்தை நிறுவுவதற்கான நோக்கம் கொண்டவர் என்பதும் அந்த நோக்கத்திலிருந்தே ஆங்கிலேயர்களை மிலேச்சர்கள் என்று எதிர்த்தார் என்பதும் மிக வெளிச்சமானது.

இத்தகைய விளக்கங்களில் இருந்து பாரதியார் மதிப்பீடு செய்யப்பட வேண்டுமேயன்றி, அவரைப் பெரும் புரட்சியாளர் போன்றும் வல்லரசிய எதிர்ப்பாளர் போன்றும் மதிப்பிடுவது அறியாமை ஆனதும், ஆரியப் பார்ப்பனிய அடிமை உணர்வுடையதுமே ஆகும்.

## இதுதாண்டா அரசியலுக்கு முதலீடு

கதருச்சட்டை
கசங்காம போடு

தலைக்குமேல
கையெடுத்துக் கும்பிடு

é†வங்கதேசக் கலவரம்
நேரம்பாத்து தாவிடு

தேர்தல் வந்தா
அம்மா தாயேனு கூவிடு

சனநாயகம் பத்தி
சதா பேசிடு

இதுதாண்டா அரசியலுக்கு
முதலீடு

அப்புறம் லாவப்பணத்தை
சுவிசுவங்கில போடு

**சந்திமாவோ**

# வங்கதேசக் கலவரம் - இந்தியா பற்ற வைத்த நெருப்பு!..

2024- ஆம் ஆண்டு, பொருளாதார நெருக்கடி, இட ஒதுக்கீடு, ஊழல், வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற காரணங்களால் வங்கதேசத்தின் ஜென் இசட் இளைஞர்கள் அப்போதைய வங்கதேச அரசை எதிர்த்துப் போராடினர். இந்தப் போராட்டம் அந்த நாடு முழுவதும் கொழுந்து விட்டு எரிந்தது.

இதனையடுத்து, கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம், தனது பிரதமர் பதவியிலிருந்து விலகி, இந்தியாவிற்குள் தஞ்சம் புகுந்தார், அப்போதைய வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா. இதையடுத்து வங்கதேச அரசின் இடைக்கால ஆலோசகராக முகமது யூனுஸ் பதவியேற்றார்.

ஆகஸ்ட் 9 ஆம் நாள், முகமது யூனுஸ் வங்காளதேசத்தின் இடைக்கால அரசாங்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்ற மறுநாளே, டாக்காவில் உள்ள ஜாபாக் சதுக்கம் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் வீதிகளில் இந்துத்துவ இயக்கங்கள் போராட்டத்தில் இறங்கினர். சிலர் " ஜெய் ஸ்ரீ ராம்" என்று முழக்கமிட்டனர் , அனுமன் கொடியை உயர்த்திப் பிடித்தனர். இது தான் இந்துத்துவ இயக்கங்கள் வங்கதேசத்தில் பற்ற வைத்த நெருப்பு. இதன் பின்னணியில் இந்திய அரசு இருப்பதை யாரும் மறுக்க முடியாது.

போராட்டங்களின் மூன்றாவது நாளான ஆகஸ்ட் 11 அன்று, பங்களாதேஷ் இந்து ஜாக்ரன் மன்ச் (BHJM) என்ற புதிய அமைப்பு இந்தியாவின் ஆதரவோடு அங்கு உருவாக்கப்பட்டது, மேலும் நிஹார் ஹல்தார், ஷுவல் ஐச் அர்கோ, ஜாய் ராஜ்போங்ஷி, ரோனி ராஜ்பாங்ஷி மற்றும் பிரதீப் காந்தி டே ஆகியோர் அதன் ஒருங்கிணைப்பாளர்களாக முன்மொழியப்பட்டனர்.

நிஹார் ஹல்தார் செப்டம்பர் மாதத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தினார்.

ஹல்தார் இந்தியா சென்று , செப்டம்பர் 21 அன்று பாஜக திரிபுரா நாடாளுமன்ற உறுப்பினர் பிரதிமா பௌமிக்கையும், செப்டம்பர் 27 அன்று கொல்கத்தாவில் முன்னாள் திரிபுரா மற்றும் மேகாலயா ஆளுநர் ததாகதா ராயையும், அக்டோபர் 1 அன்று வங்காள பாஜகவின் கலாச்சாரப் பிரிவு ஒருங்கிணைப்பாளர் ருத்ரனில் கோசையும், அக்டோபர் 28 அன்று கொல்கத்தாவின் பாஜக கட்சி அலுவலகத்தில் வங்காள பாஜக சட்டமன்ற உறுப்பினர் அசிம் சர்க்காரையும், நவம்பர் 7 அன்று பாஜக வங்காளப் பிரிவு முன்னாள் தலைவர் திலீப் கோசையும் இறுதியாக, நவம்பர் 9 அன்று மீண்டும் பௌமிக்கையும் சந்தித்துள்ளார்.

பா.ஜ.க தலைவர்களைச் சந்தித்து விட்டு, தனது சந்திப்புகளின் புகைப்படங்களை அவர் தனது முகநூல் பக்கத்தில் பதியவும் செய்தார். இதன் மூலம் இந்திய அரசு குறிப்பாக மோடி அரசு தங்களுக்குப் பக்கபலமாக உள்ளது என்பதை வங்க மக்களுக்கு உணர்த்தினார். இதன் மூலம், இந்திய அரசு, இந்துத்துவ இயக்கங்கள், வங்கதேச இந்துத்துவ இயக்கங்களின் ஒருங்கிணைப்பை நாம் புரிந்து கொள்ள முடியும்.

பா.ஜ.க ஆட்சிக்கு வந்ததிலிருந்து ஷேக் ஹசீனா ஆதரவோடு இந்துத்துவ இயக்கங்கள் தங்கள் செயல்பாடுகளைத் தொடர்ந்து நடத்தி வந்தனர். ராம நவமியை ஏற்பாடு செய்து இந்துத்துவத்தை வளர்த்து வந்தனர். ஜெய் ஸ்ரீ ராம் என்ற முழக்கம், அனுமனின் உருவம் , ராம நவமி போன்ற பண்டிகைகள் மற்றும் லவ் ஜிஹாத் போன்ற பிரச்சினைகள் குறித்த பரப்புரைகள் மூலம் இந்துத்துவத்தை வங்கதேசத்தில் காலூன்ற வைத்தனர்.

வங்கதேசத்தின் பிரதமராக ஷேக் ஹசீனா இருந்தவரை இந்தியாவுடன் அவர் நெருங்கிய நட்புறவை வளர்த்தார். இதனால் பாகிஸ்தான் வங்கதேசத்திடம் இருந்து விலகி இருந்தது. ஹசீனாவின் வீழ்ச்சிக்குப் பிறகு இந்து ஜாக்ரன் மஞ்ச் மற்றும் அதைத் தொடர்ந்து சனாதன் ஜாக்ரன் மஞ்ச் ஆகியவை நடத்திய போராட்டங்களின் விளைவாக முகமது யூனுஸ் பாகிஸ்தானுடனான வங்கதேசத்தின் உறவும் வலுவடைந்து வருகிறது. பாகிஸ்தான் தலைவர்கள் வங்கதேசத்திற்குச் செல்வதும், வங்கதேச தலைவர்கள் பாகிஸ்தான் செல்வதும் நடக்கத்தான் செய்கிறது. இது இந்தியாவை மேலும் ஆத்திரமூட்டியது. எனவே முகமது யூனுசின் ஆட்சியை மீண்டும் வரவிடாமல் தடுத்து மீண்டும் ஷேக் ஹசினா ஆட்சியை கொண்டு வர வேண்டும் என்றும் இந்தியா விரும்புகிறது.

பிரதமர் ஷேக் ஹசீனா பிரதமர் பதவி விலகியதற்கும் வங்கதேசத்திலிருந்து வெளியேறியதற்கும், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள தேர்தலில் பங்கெடுக்க முடியாமல் போவதற்கும் முக்கிய காரணமாக இருந்தது இன்கிலாப் மஞ்சா என்ற அமைப்பு தான்.



இந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளராக இருந்தவர் தான் ஜெரீஃப் உஸ்மான் ஹாடி. இவர் தான், 2024 மாணவர் தலைமையிலான கிளர்ச்சியின் முக்கிய தலைவராக இருந்தார். இவர் மீதான வெறுப்புப் பார்வை இந்திய அரசிற்கும், இந்துத்துவ இயக்கங்களும் அவாமி லீக் கட்சிக்கும் உருவாகியது. அவரது உயிருக்கு ஆபத்து எந்நேரம் வேண்டுமானாலும் இவர்களால் நிகழலாம் என்ற நிலையே இருந்தது.

வங்கதேசத்தில் ஆட்சிமாற்றம் ஏற்பட்ட பிறகு, சூலை எழுச்சிக்குக் காரணமான பல மாணவர்கள் தொடர்ந்து கொல்லப்பட்டனர், இந்தக் கொலைகளை இந்தியாவின் பின்னணியில் அவாமி லீக் கட்சி நடத்திய அரசியல் கொலைகள் என்று ஹாடி தொடர்ந்து கண்டித்து வந்தார்.

தொடர் சதிக் கொலைகளைத் தொடர்ந்து முகமது யூனுஸ் அரசாங்கத்திடம் அரசியல் கொலைகளுக்குக் காரணமான அவாமி லீக் கட்சியின் அங்கீகாரம் உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் தேசபக்தியுள்ள மாணவர்களையும் குடிமக்களையும் அரசியல் படுகொலைகளில் இருந்து பாதுகாக்க, அவாமி லீக் குழுக்களில் உள்ள பயங்கரவாதிகளை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என்றும், தனியார் பல்கலைக்கழகங்கள் உட்பட அனைத்து சூலை இயக்கப் போராளிகளின் முழு பாதுகாப்பை உறுதி செய்தல் வேண்டும் என்றும் மூன்று கோரிக்கைகளை முன்வைத்தார் ஹாடி.

இதன் பின்னணியில் தான், முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு, ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடத் தடை விதித்ததுடன், சூலை மாதப் படுகொலைகள் தொடர்பாக அவர் மீது சர்வதேசக் குற்றவியல் தீர்ப்பாயத்தில் வழக்குகளும் தொடரப்பட்டு கைது வாரண்ட் பிறப்பித்து இந்தியா ஹசீனாவுக்கு அடைக்கலம் கொடுக்கக் கூடாது என்று வலியுறுத்தியது. அதையும் மீறி ஹசீனாவுக்கு இந்தியா அடைக்கலம் கொடுத்துள்ளது.

இதற்குப் பிறகு, ஹசீனாவின் ஒத்துழைப்பு இல்லாமல் நடைபெற்ற வழக்கு விசாரணையின் முடிவில், வங்கதேசத்தின் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம், முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவை மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களில் குற்றவாளி என அறிவித்து, அவருக்கு மரண தண்டனை விதிப்பதாகவும் தீர்ப்பளித்துள்ளது. இந்தத் தீர்ப்புக்குப் பிறகு ஷேக் ஹசீனாவையும் முன்னாள் உள்துறை அமைச்சர் அசாதுஸமான் கான் கமாலையும் தங்களிடம் ஒப்படைக்குமாறு இந்தியாவிடம் வங்கதேசம் முறைப்படி கேட்டிருக்கிறது. வங்கதேசத்தின் கோரிக்கைக்கு இந்தியா செவிமெடுக்காமல் இழுத்தடிக்கிறது.

இப்படி ஒரு நெருக்கடியான நிலையில், வங்கதேசத்திற்கான பொதுத் தேர்தல் பிப்ரவரி 12, 2026 அன்று நடைபெற உள்ளதாக முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசாங்கம் அறிவித்துள்ளது. அவாமி லீக் கட்சிக்கு அரசியல் நடவடிக்கைத் தடை நடைமுறையில் இருப்பதால் இந்தத் தேர்தலில் அவாமி லீக் பங்கெடுக்க முடியாது.

அதேநேரம், ஹாடி டாக்கா- 8 தொகுதியில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடுகிறார். தீவிர பரப்புரையிலும் ஈடுபட்டு வந்தார். தன்னுடைய தேர்தல் பரப்புரையில், இந்தியாவையும், வங்காளதேசத்தில் உள்நாட்டு அரசியலில் அதன் செல்வாக்கையும் ஹாடி வெளிப்படையாக விமர்சித்து வந்தார். வங்கதேசத்தின் சனநாயகப் போராட்டம், குறிப்பாக இந்தியாவிலிருந்து வெளிப்புற ஆதிக்கத்தை அகற்றுவதோடு உள்ளார்ந்த முறையில் இணைக்கப்பட வேண்டும் என்று ஹாடி வலியுறுத்திப் பேசி வந்தார். வங்கதேசத்தின் மீதான "இந்திய மேலாதிக்கம்" தகர்க்கப்பட வேண்டும் என்றும் பேசி வந்தார்.

இப்படியான நிலையில் தான், ஹாடி, கடந்த வாரம் டாக்காவில் உள்ள ஒரு மசூதியிலிருந்து வெளியேறியபோது முகமூடி அணிந்த நபர்களால் சுடப்பட்டார். அவர் சிங்கப்பூரில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் டிசம்பர் 18ஆம் நாள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

ஹாடியின் மரணத்தைத் தொடர்ந்து, அவர் மீது தாக்குதல் நடத்தியவர்கள் இந்தியாவுக்கு தப்பிச் சென்றுவிட்டதாகத் தகவல் பரவியது. இதனால், இந்தியாவின் மீதான கோபத்தை இந்துக்கள் மீது அவர்கள் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். தீபு சந்திர தாஸ், 30, என்ற இந்து இளைஞர் சுற்றி வளைத்து கொடூரமாகத் தாக்கிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வங்கதேசத்தில் தடை செய்யப்பட்ட அவாமி லீக்கின் கட்சியின் மாணவர் அணி முன்னாள் உறுப்பினர் பைசல் கரீம் மசூத் என்பவன் தான் ஹாடியைச் சுட்டதாகக் காவல் துறை கண்டறிந்தனர். தற்போது அவன் இந்தியாவுக்கு தப்பிச் சென்றுவிட்டதாகக் காவல் துறை கூறுகின்றது.

தற்போது, ஹாடியின் படுகொலையை முன்னிட்டு வங்கதேசம் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. இந்தியாவுக்கு ஆதரவான டாக்காவின் கவ்ரான் பஷார் பகுதியில் உள்ள அந்நாட்டின் பிரபல பத்திரிகைகளான, 'பிரைம் ஆலோ' மற்றும் 'டெய்லி ஸ்டார்' அலுவலகங்களை அடித்து நொறுக்கி தீ வைத்தனர். டாக்காவில் உள்ள இந்தியத் தூதரகம் மீது கல் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டது.

தேசியக் குடிமக்கள் கட்சியின் (NCP) தலைவர் சர்ஜிஸ் ஆலம், “இடைக்கால அரசாங்கம், ஹாடி கொலையாளிகளை இந்தியா திருப்பி அனுப்பும் வரை, பங்களாதேசுக்கான இந்திய உயர் அலுவலகங்கள் மூடப்பட்டிருக்கும், நாங்கள் ஒரு போரில் இருக்கிறோம்!" என்று கூறியுள்ளது.

வங்காளதேச தேசியவாதக் கட்சி நாதிம் ஹவ்லாடர், "ஷேக் ஹசீனாவும் கொலைகளுக்குப் பொறுப்பான அனைவரும் திரும்பி வரும் வரை" போராட்டங்கள் தொடரும் என்றும் "நாங்கள் அவரது கொலையையும் இந்திய ஆக்கிரமிப்பு என்று நாங்கள் கருதுவதையும் எதிர்க்க வந்துள்ளோம்," என்று கூறியுள்ளார்.

இவரது படுகொலையைக் கண்டித்து நடந்த போராட்டத்தில்

" வங்கதேசத்தின் இறையாண்மை, ஆற்றல், வாக்குரிமைகள் மற்றும் மனித உரிமைகளை மதிக்காத சக்திகளுக்கு நீங்கள் அடைக்கலம் கொடுத்தால், வங்கதேசம் பதிலடி கொடுக்கும் என்பதை நான் இந்தியாவிடம் தெளிவாகக் கூற விரும்புகிறேன்," என்றும் " வங்கதேசத்தை நிலையற்றதாக்குவது பரந்த பிராந்திய விளைவுகளை ஏற்படுத்தும் " என்றும் , சுதந்திரம் பெற்று 54 ஆண்டுகள் கடந்த பிறகும், வங்கதேசம் இன்னும் நாட்டைக் கட்டுப்படுத்த முயற்சிக்கும் ‘கழுகுகளின்’ முயற்சிகளை எதிர்கொண்டு வருகிறது என்றும் தேசியக் குடிமக்கள் கட்சியின் தலைவர் ஹஸ்னாத் அப்துல்லா இந்தியாவிற்கு எச்சரிக்கை விடுத்தார்.

இந்திய அரசு தங்களது விரிவாதிக்கக் கொள்கையின் காரணமாகத் தங்களது அண்டை நாடுகளில் எப்படி மூக்கை நுழைக்கிறதோ, அப்படி, 1971 முதல் வங்காளதேசத்தின் மீதும் தேவையற்ற வகையில் அரசியல் செல்வாக்கைச் செலுத்தி வருகிறது, ஷேக் ஹசீனாவின் ஆட்சியைப் பயன்படுத்தி மோடி அரசு இந்துத்துவத்தை வளர்க்கிறது. இதன் விளைவாக அங்கு இஸ்லாமிய அடிப்படைவாதமும் வளர்ந்து வருகிறது.

தற்போது, ஹசினா தேர்தலில் போட்டியிட முடியாமல் போய் விட்டால் தங்களது ஆதரவான அரசு அமையாது என்பதும் பாகிஸ்தானுடன் நல்லுறவு பேணுகிற அல்லது இந்திய எதிர்ப்பு அரசே ஆட்சி அமைக்கும் என்பது இந்திய அரசிற்குத் தெரியும். எனவே, தேர்தல் நடைபெறாமல் போவதற்கான எல்லா வேலைகளையும் இந்திய அரசும், இந்துத்துவ இயக்கங்களும் , அவாமி லிக் கட்சியும் செய்யும். இதன் விளைவுதான் அரசியல் படுகொலைகளும் அதனையொட்டி நடைபெறுகிற கலவரங்களும்.

இந்தியாவின் விரிவாதிக்கக் கொள்கைக்கு எதிராக வங்கதேசம் போராடினால் மட்டும் போதாது நாமும் போராட வேண்டும். இன்னொரு நாட்டை அடிமையாக வைத்திருக்க நினைக்கும் ஒரு விரிவாதிக்க அரசு தன் சொந்த நாட்டு மக்களையும் அடிமையாக வைத்திருக்கவே விரும்பும். எனவே தான் வங்காள தேச மக்கள் மட்டுமல்ல நாமும் போராட வேண்டும் என்கிறோம். எனவே, இந்தியா வங்கதேசத்தில் பற்ற வைத்துள்ள நெருப்பைச் சேர்ந்து அணைப்போம்.

## எதிர்வினைக்காலம்...

**தமிழிசைப்பா**

கடவுள்
என்று கூறி
கல்லாக்கி
வேடிக்கைப்
பார்க்கிறீர்கள்...

கள்ளிப்பால்
கொடுத்து
காட்டில்
எறிகிறீர்கள்...

காதல்
என்ற பெயரில்
காட்டுப் பங்களாவில்
கூட்டுப் பலாத்காரம்
செய்கிறீர்கள்...

கல்விக்கூடம்
வந்தால்
கருக்கலைப்பு
நடத்துகிறீர்கள்...

அலுவலகம்
சேர்ந்தால்
அறைக்கு
அழைக்கிறீர்கள்...

அரசியலில்
இணைந்தால்
அரைநிர்வாணப்
படுத்துகிறீர்கள்...

மதவெறிப்
பிடித்தால்
ஆடைகளைத்து
களியாட்டம்
ஆடுகிறீர்கள்...

இன்னும்
என்னவெல்லாம்
திட்டம் உண்டு
மனிதம் மரித்த
மலங்களே...

போதும்...
போதும்...
போதும்...

நிறுத்திக்கொள்ளுங்கள்
இறுதியாக
எச்சரிக்கிறோம்...

நாங்கள்
பெரியாரின்
பெயர்த்திகள்...

எங்கள்
கைகளிலும்
வாள்கள்...

சுடுமணலில்
உங்களைக்
கிடத்தி
ஆடை கிழித்து
ஆண்மை
அழிப்போம்...

ஆம் இனி
எங்களின் காலம்
எதிர்வினைக்காலம்...

**தமிழ்நாடு இதழுக்காக அண்மையில் நன்கொடை வழங்கியவர்கள்**

| | |
|---|---|
| திரு. தென்முகநம்பி, சென்னை | 1000 |
| தோழர் செங்குட்டுவன், ஆவடி | 500 |
| தொழிலாளர் சமூகநீதி இயக்கம், சென்னை | 500 |
| பிச்சைவள்ளிநாயகம் | 500 |
| முனைவர் முத்தமிழ், தஞ்சை | 500 |
| முனைவர் குணத்தொகை | 500 |

நூல் அஞ்சல்

பெறுநர்:

விடுநர்:
தமிழ்நாடு, 4/197, பல்லவன் நகர், 3 ஆவது தெரு,
மேடவாக்கம், சென்னை 600100 கைபேசி 97108 75283,

வெளியீட்டுக் குழு : பொழிலன், பேரா. த. செயராமன், முத்தமிழ், கண. குறிஞ்சி, நிலவழகன், பாவெல்
தமிழ்நாடு (மாத இதழ்) 4/197 பல்லவன் நகர், 3 ஆவது தெரு, மேடவாக்கம், சென்னை 600100 கைப்பேசி 97108 75283, 91713 78874
(கீற்று இணையதளத்திலும் பார்க்கலாம்) மின்னஞ்சல் : thamizhnadu2051@gmail.com
அச்சிட்டோர் : மூகாம்பிகை அச்சகம், 24, வாணிபர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600005